## CONTENT


- Editorial
- Provincial's message
- In you all find their home
- நல்ல பிதாவும் இரக்கச் செயல்களும்
- Vital call of a Christian love ...
- இறைவன் தந்த மாமனிதர்
- அர்ப்பணத்தின் 60 ஆண்டுகளின் நிறைவில்
- Questions!!! In the Houses of Nazareth!!!
- இவ்வழிச் சென்ற இனிய மனிதனின் இரக்கச் செயல்கள்
- இரக்கத்தின் ஆண்டில் அர்ப்பண வாழ்வு ஓர் உன்னத வெளிப்பாடு
- Old Brother
- கேள்வி கேட்கும் சமூகமும் எமது அழைப்பும்
- Get closer to our world
- பூமித்தாய்
- The quality of a teacher
- இரக்கத்தின் செயல்களால் துலங்கட்டும் அர்ப்பண வாழ்வு.
- அன்பு செலுத்துவதன் அடிப்படைத் தேவை
- Let us be faithful to the infinite Mercy of God
- அர்ப்பண வாழ்வு விடுக்கும் சவால்கள்
- Journey towards the wounded
- இறை இரக்க ஆண்டின் பரிசு
- A call for/ of mercy from nature
- இரக்கமே இறைவனின் முகவரி
- One day with landslip refugees at Miriampatha, Koslantha
- நிஜங்களும் நிழல்களும்
- The Divine Heart
- My experience in Martillac
- போர் தந்த பரிசு
- திருமட சார்பற்ற குழுவினரின் ஆன்மீக .......
- Try your best to touch the Divine
- நீர் என்னை தொட்டீர் நான் நலமடைந்தேன்.
- எமது பயணங்களில் புதிய அனுபவங்கள்

- First Three articles of the Holy Family Association
- நாம் மறவோம்
- My Journey in the community
- நாம் தேடும் அமைதி
- Sharing our togetherness
- We are with you!
- தியானத்தின் அனுபவங்கள்
- அன்பு
- Home Garden - Bursars' Team
- பயணங்கள் நிறைவேற....
- வேண்டாம் போதை; நடப்போம் நல்ல பாதையில்
- My experience with our elderly Sisters
- வங்காலையில் பூத்த சகோதரி
- Saint Mother Teresa
- ஆசிரிய சகோதரிகளுக்கான கருத்தமர்விலிருந்து
- இரக்கத்தில் இயேசுவைக் காணல்
- In the University...
- உன்னை அன்பு செய்யும் இறைவன்
- அர்ப்பண ஒன்றுகூடல்
- புதிய உலகக் கண்ணோட்டத்தில் பிரபஞ்சம்
- இறை இரக்கத்தைத் தன் வாழ்வின் பணியாக....
- Hope is a reality to keep the faith...



# Editorial

We are journeying in the Jubilee year of Mercy. We have also undergone a spiritual Renewal, by means of our Annual Retreat, sharing and conversion.We are grateful to the Lord for all such experiences.

"The face of God is Mercy' This is the central theme for this Jubilee year. This issue of "Kudumpa Uravuhalin Sangamum" comes to share with you all in depth, God's limitless love and human dignity He has clothed us with. The five vocations give us the opportunity, to journey together and to impart God's mercy and love to all around us.

This issue of 'Kudumpa Uravuhalin Sangamum' through its various articles, contributed by the members of all five vacations in the family of PBN help us to deepen our life of consecration, and to realize its dignity. God's mercy in all its aspects, the challenges proposed to us - consecrated persons, such as the present situation we live in, the wounded. Humanity Pain inflicked on various categories of our population - single women, and orphaned children- disappeared persons, loss of lives and properties - to sum up, the incurable scars - consequences of war, call us for deeper understanding of our consecration, and be refocussed in faith in the service of all life.

One of our Ancient Poetess Aufaiar (ஔவையார்) in her words of wisdom said "Even when you cut the tree, yet it gives shade to the cutter, until it falls to the ground". She says to do good, even to those who hurt us, cause harm to us. Let us be truly rooted in the love of God. which finds its expression in our life of forgiving and forgetting. Our founder says: "There is nothing that can check your course," So let us go forward with courage!.

As we are getting ready to welcome Sr. Eithne Hughes our General councillor for the animation of our unit, let us give her a warm welcome and let us also pray for the success of the meeting the Asian Leadership Teams, to be held in our country. Welcome dear Sisters - Participants of the same event. We hope and pray that you have a grace - frilled session and enjoyable stay in our country.

# ஆசிரியரிடமிருந்து...

அன்பின் வாசக நேயர்களே

இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நிறைவை நோக்கி பயணிக்கின்ற இந்த நாட்களிலே எங்களுக்குள்ளே நடைபெற்ற புதுப்பித்தல்கள், பகிர்தல்கள், மனமாற்றங்கள் எல்லாவற்றுக்கும் நன்றி கூறுகின்றோம். எதிர்வரும் மாதத்தில் எங்களை தரிசிக்க - வரும் சகோதரி எட்னாவையும், அதைத் தொடர்ந்து ஆசியாக் கண்டத்தைச் சேர்ந்த தலைமைத்துவக் குழுவினருக்காக நடைபெற இருக்கும் புதுப்பித்தலுக்காக, வர இருக்கும் சகோதரிகள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

“இறைவனின் சாயல் இறை இரக்கமே'' என்ற தொனிப்பொருளைத் தாங்கி, இறைவனின் அளவு கடந்த இரக்கத்தையும் அன்பையும் மனித மாண்பையும் வெளிப்படுத்தி, இறை இரக்கத்தை நோக்கி மிக ஆழமாக நெருங்கிச்செல்ல, எமது ஐந்து அழைத்தல்களின் பல கருத்துக்களைத் தாங்கி “இரண்டாவது குடும்ப உறவுகளின் சங்கமம்'' உங்களோடு சங்கமிக்கின்றது.

அர்ப்பணத்தின் மேன்மையை உணரும் கருத்துக்களையும், எம் ‘தந்தை' என நாம் அழைக்கும் எமது நல்ல பிதாவின் மாண்பையும், அவர் விடுக்கும் சவாலையும் தாங்கி இவ்விதழ் வெளி வருகின்றது. போர் தந்த பரிசு என்ற கருப் பொருளிலிலும், போரின் வடுக்களையும் பல்வேறு விதங்களில் தாங்கி நிற்கும் உணர்வலைகளையும், இன்றைய சமகால நிலமைளையும், இன்னும் பல சகோதரிகளின் பணி அனுபவங்களையும் தனதாக்கி நிற்கின்றது.

ஔவையாரின் மூதுரையில் “ஒருமரத்தை வெட்டும் போது அது நிலத்தில் விழும் வரை வெட்டுபவனுக்கு, நிழல் கொடுக்கும்'' என்று கூறுவதன் மூலம், தீமை செய்பவனுக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று கூறுகின்றார்.

அன்பின் வாசக நெஞ்சங்களே! மன்னிப்போம்; மறப்போம்; ஆழமான அர்ப்பணத்துடன் இறை உறவில் நிலைத்திருப்போம். ‘உங்கள் ஓட்டத்தைத் தடை செய்வது எதுவுமில்லை' என்ற எமது நல்ல பிதாவின் அழைப்புக்கேற்ப, முன்னேறிச் செல்ல - குடும்ப உறவுகளின் சங்கம வாசக நேயர்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றோம்.

## Provincial's Message

"Where and how God's love needs to be expressed by HOLY FAMILY TODAY."

The call of the General Chapter 2014 connects us once again to live life at each moment, as relational as possible in the midst of reality, where life is threatened, uncertain and dis- respected. We feel one with all those cherished lives and experience the urgency to make our HOME-EARTH, A NEW and SAFE one.

Deep listening to daily moments of life that are given to us, lead us to be awakened and to join the rhythm of silence that the cosmic movements offer and here we learn to nurture life.

Pope Francis asks us to reshape our anthropological vision according to the vision of God who moves the Sun and other stars, respecting our unique dignity as human beings-creatures of this world who have the right to life and happiness.

LIFE is beautiful when we embrace each moment and respond to it gracefully.

We are so blessed to treasure each moment and share the fragrance of life – LIFE to the FULL.

I vibrate my blessings of life…. to all our Sisters and Brothers in all parts of the Globe where we struggle to live life to the FULL.

**Sr. Christa Mariathas**
**Provincial**

# " IN YOU, ALL FIND THEIR HOME "

Every month- the 3rd week of Thursday, while I pray the morning prayer of the Church, I'm inspired and challenged by the last verse of Ps.87. "…while they dance, they will sing:

**'In you all find their home.'**

The Psalm speaks of Jerusalem – Sion, where all God's children gather together, finding in it their **HOME**. The Home of God – God's people – brothers and sisters.

This Jubilee year of Mercy is a renewed invitation to live up to what we love, seek and desire here on earth. Our Holy Father Pope Francis begins his **"Bull of Indication of the Extraordinary Year of Mercy**" saying**, Jesus Christ is the face of the Father's mercy…………** (His face) has become **living and visible** in **Jesus of Nazareth** reaching its culmination in Him."

We who are called to continue this mission as followers of Jesus Christ of Nazareth??????

Contemplating on the mystery of mercy we become aware that , Mercy is the fundamental law that dwells in the heart of every person who looks sincerely into the eyes of her/his sisters and brothers. How do we live this? How did Jesus show the face of the Father? Taking just one example, Jesus did not abide by Sabbath Law. His merciful heart was open and was drawn to the needy. Hence he extended his heart and hands to heal and make whole, enabling human beings to live with their right and dignity. The Spirit of God who led Jesus all through his life and ministry, leads and moves us forward to be merciful to those near and dear; strangers and enemies – welcoming all into our hearts, into our homes.

Our Holy Father Pope Francis over and over again urges us to extend our forgiveness to all. Reading the signs of the time around us, we clearly see, that our planet earth inhales today the polluted spirit of violence, revenge, power and prestige. The society today believes in continued oppression, and stepping on the weak and fallen, trying to prove to be higher than everybody else.

Is it possible to ignore, tolerate, compromise or even venture to forgive such a disastrous harmful situation.

**NOT EASY; BUT POSSIBLE!!!**

Jesus of Nazareth deliberately dared to show the face of the Father and forgave such cruelty inflicted upon him by the very high priests and teachers of the law. He certainly proved that **'FORGIVENESS IS POSSIBLE'**

We need to open our hearts to all, including our seemingly enemies, and forgive them from our hearts, of course, along with Jesus who also forgives them with tenderness and mercy. We willingly wish them well and extend our blessing on them, acknowledging our own tendency to fall. This humble and truthful acceptance brings peace that comes from our glorified Saviour!. The sweetness of such action can only be experienced than comprehended.

Over the years, we have been fed with **the new vision of our UNIVERSE** gradually, and our Pope Francis in his encyclical "Laudato Si " calls us back to the ecstatic experience of St. Francis of Assisi**, in whom** ' all, including all planets and created beings **Found their Home.**

This is how, the call to be "Experts of Communion", (cf. Letter to Consecrated people, 2), a very special and specific call to the Holy Family members can be realized. A total paradigm shift is to take place as we enter the **door of** the heart of our merciful Jesus and are born anew. The new heaven and the new earth which we envisage as the result of living our charism of communion should first be realized in our **own HEART - HOME.**

We question ourselves:

· Can my community members, the students we teach , the people I guide, the members of my family, The Holy Family members of each vocation, say of me: " **IN HER/ HIM ALL FIND THEIR HOME ????? "**

- Romuald

# நல்ல பிதாவும் இரக்கச் செயல்களும்

மனிதம் வாழப்படும் போதுதான் அதன் மகத்துவம் விளங்கும். அன்பு செயல் வடிவம் பெறும் போது தான் அதன் பொருள் புரியும். இரக்கம் செயலாக்கம் பெறும் போது தான் அதன் தாற்பரியம் உணரப்படும்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டில் ''உங்கள் வானகத்தந்தை இரக்கம் உள்ளவராக இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாக இருங்கள்'' என்ற மையப் பொருளில் எம் பரிசுத்த தந்தை பிரான்சிஸ், யூபிலி ஆண்டின் கதவை அகலத் திறந்து வைத்து இருக்கச் செயல்களுக்கு முன் உதாரணமாகவும் வாழ்ந்து காட்டுகிறார்.

இந்த சிந்தனை செயற்பாடுகளைக் காணும் போது எம்பாரிய குடும்பத்தின் தந்தையாகிய பியன் வெனுவும் இரக்க செயற்பாடு களுக்குச் சளைத்தவர் இல்லை. இவரிடத்தில் விளங்கிய பண்புகளை சிந்தித்த வேளை, சிறு பராயம் தொடக்கம் சாதாரண துணிவு அல்ல, அசாதாரண துணிவு கொண்டவர். கவிதைகள், நாடகங்கள் இயற்றுவதிலும் அவற்றை மேடையேற்றுவதிலும் இவருக்கு நிகர் இவரேதான். சிந்தனையில் இரக்கமுள்ளவர், ஈர நெஞ்சுடையவர்களுக்கு இவரது கவிதைகள் இதமாக அமையும். நேரகாலம் சரியோ- தடையோ வரினும் மேடையேற்றவேண்டியவற்றை ஏற்றியே விடுவார். இதற்கெல்லம் தோள்கொடுத்து உதவியது அவரின் துணிச்சல். ஆகவேதான் அசாதாரண செயல்களையும் துணிவுடன் செய்து வெற்றியும் கண்டதோடு, தோல்வியை எதிர்நோக்கி துணிவையும் கைவிடாமல் தொடர்ந்தும் முயன்றார்.

இந்த துணிவிற்கும், இரக்கத்திற்கும் என்ன தொடர்பு என சிந்தித்த போது எம் திருத்தந்தையின் டுவிட்டர் செய்தியிலிருந்து விளக்கம் கிடைத்தது. அதாவது, ''இரக்கமுள்ளவராக இருப்பது என்பது துணிச்சல், மனத்தாராளம், மற்றும் நிதர்சனத்தைக் கொண்ட அன்பில் வளர்வதாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். இச்சொற்றொடருக்கு உரிமையாளன் எம் பியன்வெனு தந்தை என்றால் மிகையாகாது. சிறுவயதில் குறும்புத்தனங்கள் இருந்தாலும் துன்பத்தில் இருப்பவர்கள், நோயாளிகள், தனிமையில் வாடுவோருடன் இதமாகப் பேசி மகிழ வைப்பார். ஏன் தாயின் கண்ணீரைக் கண்டவர் மனம் இளகி அவளின்

கண்ணீரை துடைக்க மனம் மாறியவர். மனமாற்றத்தின் போது இறைவனின் அன்பையும் இரக்கத்ததையும் அனுபவிப்பதற்கு, தான் ஒப்புரவு அருட்சாதனமின்றி நான் நற்கருணை பெற முடியும் என துணிவுடன் கூறினார். தான் அனுபவித்த இறை அன்பையும், இரக்கத்தையும் பிறருடன் பகிர்ந்து வாழ, உலக பட்டங்கள், பதவிகள் துணை செய்யாது என அறிந்து இறை அழைத்தலில் மட்டும் அமைதியை அடைந்தார்.

குருமாணவனாக இருக்கும்போதே ஒரு சபையை உருவாக்கத் திட்டமிட்வர். குருவாகிய 2 வருடங்களுக்குள்ளே 3 இளம் பெண்களுடன் 80 பிராங் வீட்டு வாடகைக்கு 75 போக மிகுதி 5 பிராங் பணத்துடன் சபையை நிறுவினார் எனில் அவரின் வீரத்துவமான துணிவும், ஆன்ம தாகமும் தான் என்று கூறுவதில் பெருமை அடைகின்றோம். சபையை நிறுவியதும் அவரின் பார்வை முதலில் அநாதைப் பிள்ளைகள், கைவிடப்பட்டோர், வறிய பிள்ளைகள். நோயாளிகள் மடடில் திரும்பியது. ஏனெனில் அது புரட்சியின் காலம். ஓவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு குழுச் சகோதரிகளை உருவாக்கி ஒவ்வொரு மனிதனிலும் இறைவனைக் காணவும், அவருக்கே பணி புரிகிறோம் என்ற விசுவாசத்துடன் அவர் மாத்திரமே என்ற விருது மொழியையும் - இறை பராமரிப்பையும் இணைந்து ஒருகட்டுக்கோப்பான பாரிய குடும்பத்தை நிறுவினார்.

தன் வாழ்விலே நாளாந்த தேவைகளுக்குரிய பொருட்களைக் கூட பிறருக்குக் கொடுத்து விட்டு பிறரின் சுகத்தில் இன்பம் கண்டவர் எம் தந்தை. தான் உருவாக்கிய சக குருக்கள் கூட அவரை விட்டுப் போன போது, இறைவனை மட்டுமே அவ்வீட்டில் கண்டேன் எனக் கூறினார் எனில், அவரிடம் விளங்கிய ஆழமான இறைநம்பிக்கை, இரக்கம். மன்னிப்பு, வீரத்துவம் எவ்வளவு என்பதை அறிந்து கொள்ளலாம்.

இறைவனின் இரக்கம் எப்படி பல வடிவங்களில் காணப்படுகின்றதோ, அவ்விதமே எம் நிறுவினரின் இரக்கமும் பல வடிவங்கள் எடுக்கின்றன. இதற்கு அவரது நாளாந்த குறிப்பேடுகள் சாட்சிபகர்கின்றன. அவரின் ஆன்மீகத்தின் ஆணிவேர் ''இறைவன் மாத்திரம்'' இறைவன் மாத்திரமே எனும் போது இறைவனின் அன்பில், இரக்கத்தில், மன்னிப்பில், பராமரிப்பில், முழுமையாக சரண் அடைவதையே குறிக்கின்றது.

எனவே, அவரது பிள்ளைகளாகிய நாமும் இறை தந்தையின் இரக்கத்தில் வாழ எம் மனித பலம் போதாது என்ற நொண்டிச் சாட்டை விடுத்து, சாதாரண மனித வாழ்வு வாழ்ந்த எம் நிறுவன தந்தையின் அறிவுரைகள் மட்டுமல்ல, அவரது வாழ்வும் எமக்கு முன் உதாரணங்களாக உள்ளன. எனவே நாளாந்தம் சிறிய சிறிய இரக்கச் செயல்களில் ஈடுபட்டு வாழ்வோமாயின் யூபிலி ஆண்டின் இறுதியில் இரக்கம் உள்ளவர்களாக மாறுவோம். மாறிய நாம் பிறரையும் மாற வைப்போம். என்பதில் சந்தேகமில்லை.

Sr.Benignus



**Dear Sisters ...**

**Together with my family members we express our gratitude to Sr. Christa and her council and all the sisters who were present at our brother's funeral. We sincerely express our special thanks for your prayers, loving support and encouraging messages that we had received on that day.**

With gratitude and love
Srs. Milred, Regina.S & Milred.S

# Vital Call Of A Christian Love neighbour As Yourself

As I walk along the Gospel path, I used to wonder at times, "Is it really possible to love my neighbour as I love myself? "Isn't it too demanding?" However, gradually I came to realize that the problem is within me- there is fear in me "What will happen to me if and when I help a particular person in need?" Reflecting over the fears within me, I was inspired to change the question, and so I asked myself from the depth of my being "What will happen **- not to me**- but to my brother/ sister if I do not take the initiative to be of service to him/ her." This reflection became a turning point in my personal life to exercise the Law of love and show mercy to my neighbor.

"Loving the neighbour" is a vital call in any Christian living. In fact, the apostle Paul advised Timothy that the goal of their preaching was "Love" springing from a pure heart a good conscience and a sincere faith. (1Tim 1:5). Jesus gave only one commandment, **TO LOVE.** The love of God comes first because God is the source and foundation of our love for others. It is up to us to see how to love God and our neighbor. From deep within let us ask ourselves, "Why is loving others as ourselves so difficult?" Being sincere with our own selves, various challenges may confront us,

- A threat to one's self love, - to comfortable and convenient routine of life style.
- I need to sacrifice my own plans and programs of the day which would deprive me of my own presumed happiness and personal satisfaction.

These little challenges cost us in living radically the law of love as Jesus requires of us.

Through the story of the Good Samaritan, Jesus gives us a basic understanding of what it means to love our neighbour as ourselves. If we may express it in our own terms, it means to desire for others what we would wish for ourselves when we face a similar situation. In response to

the question of the lawyer, Jesus challenges, “Which of them do you think was a neighbour to him who fell into the hands of robbers.” He replied, “The one who showed mercy.

In the same way, as we are in the Jubilee year of mercy, it is a call for us too to overcome all barriers which may hinder us from being merciful to others just as our heavenly Father is. According to our Holy father Pope Francis, “**Mercy is the beating heart of the Gospel.** Also, he desires that this year be steeped in mercy, so that we can promote the goodness and tenderness of God to every person. May the balm of mercy reach every believer and non believer even those who are far away as a sign that the kingdom of God be present in our midst.



In today’s fast changing world, we see and hear of the merciless acts of inhuman behavior. Let us ask ourselves, “Do we weep when we see a hungry child, one person subject to drugs and abuses, homeless child rejected by society and used as a slave? We cannot love our brother/ sister across the world, if we do not love our neighbor across the street, the immediate society, the community….

Once there was a farmer who grew” award-winning corn”. Each year he entered his corn in the state fair where it won a prize. One year a newspaper reporter interviewed him and learned something quite interesting. The reporter discovered that the farmer shared his seed corn with his neighbours.“How can you afford to share your best seed corn with your neighbours when they are entering the same in competition with yours each year?” the reporter asked.“Why sir,” said the farmer, “didn’t you know? The wind picks up pollen from the ripening corn and swirls it from field to field. If my neighbours grow inferior corn, cross-

pollination will steadily degrade the quality of my corn. If I am growing good corn, I must help my neighbors also to grow good corn."The farmer was very much aware of the connectedness of life. His corn cannot improve unless his neighbor's corn also improves. So it is with our lives. Those who choose to live in peace and wellbeing must help their neighbours to live in peace and wellbeing as well. For the value of a life is measured by the lives it touches. And those who choose to be happy must help others to find happiness, for the welfare of each is bound up with the welfare of us all. The lesson for each of us is this: If we are to grow good corn, we must help our neighbors also to grow good corn. Let us Love all those that cross our path.

Mother Teresa says, "I never look at the whole crowd of people masses as my responsibility; I look at the individual. I can only love one person at a time - just one, one, and one. So you begin. I began - I picked up one person. Maybe if I didn't pick up that one person, I wouldn't have picked up forty-two thousand....The same thing goes for you, in your family, in your church, your community. **Just begin - one, one, and one.**

Individually, we are one drop, together we are an ocean. Let us start today with one so that the entire universe will become an ocean of mercy love and divine.

Sr. Rishmala Michael,
Nagoda.

# இறைவன் தந்த மாமனிதர்



எப்படியும் வாழலாம் என்ற இவ்வுலகில்
இப்படித்தான் வாழ வேண்டுமென
இறைவன் தெரிந்திருந்தார் ஒருவரை
அவரே எம் நல்ல பிதா.

புரட்சியில் பூத்தார்
உலகில் புரட்சிகள் செய்யவில்லை
புரியாத பலவற்றை
எங்கும் புரிந்திடச் செய்தார்.

திரித்துவத்தின் சாந்தம் கண்டு
திருக்குடும்ப சபை அமைத்தார்
இறைவனின் அருமையான கனவை
நனவாக்கும் பிதா

வேட்டை நாய் போல் இறைவன்
எம்மைத் தேடி அலைய
இறைவன் மாத்திரமே என்று
வாழ எம்மை அழைத்தார்.

இயேசுவின் ஆலோசனை கேட்காமல்
எதையும் செய்ய வேண்டாமென
பரிவோடு எம்மையெல்லாம்
பாசத்துடன் அழைக்கின்றார்.

பிரபஞ்சத்தில் எம் பங்கு
என்ன என்பதை உணர
எம் சபை வழியாக
பலவற்றைத் தருகின்றார்.

பாடுகள் பலபட்ட இவ்வுலகில்
இரக்கத்தோடு நாம் வாழ
பக்குவமாய் பல வழிகள்
பாருலகில் காட்டி நின்றார்.

அவர் பிறப்பால் நாம் மகிழ
எம் பிறப்பால் இறை மகிழ
அனைத்துப் படைப்பையும் ஒன்றாய்
இறையரசில் மகிழச் செய்வோம்.

Neeta Antonipillai

# அர்ப்பணத்தின் 60 ஆண்டுகளின் நிறைவில்

திருக்குடும்ப சபையில் இறை அழைத்தலைப் பெற்றப் பத்தொன்பது ஆரம்ப நிலையினர் நாம், காலடி பதித்த நாள் வாழ்வில் என்றும் மறக்கமுடியாதவை. 1954 ம் ஆண்டு மார்கழி மாதம் பண்டத்தரிப்புத் தியான இல்லத்தின் மத்தியில் யேசுவின் திருச்சுரூபம் கைவிரித்து எம்மை வரவேற்க உவகையுடன் உள்ளகம் சென்றோம்.

இயற்கையான அழகு பொலிந்த பனை, தென்னை அடர்ந்து காணப்பட்ட சுற்றாடல் இறைவனது பிரசன்னத்தை உடனே வெளிப் படுத்தி நின்ற இவ்விதமான சிறப்புக்களை நினைத்து இறைவனுக்கு முதற்கண் என் நன்றிப்பூக்களை அர்ப்பணம் செய்கின்றேன்.

உயர்த்து நிமிர்ந்த பலமான கட்டிடத் தோற்றம், அங்கிருந்து மலர்ந்த முகத்துடனும் அன்புடனும் எம்மை mother Theophane, conception Annunciation, அத்துடன் சுதேச சகோதரியான Everista அவர்கள் வரவேற்றனர்.

இவர்களது பராமரிப்பும், நுணுக்கமான ஒழுங்குக் கிரமமும், பயிற்சிநெறிகளும், செபவாழ்வும், சபைவாழ்வும், பிரமாணிக்கமும் சேர்ந்து அர்ப்பணிப்பிற்கு ஆழமான அத்திவாரத்திற்கு வித்திட்டது. இந்த நகர்வில் இதே ஆண்டில் ஆனி மாதம் மூன்று ஆரம்ப நிலையினர் மேலும் இணைந்தனர்.

எமது திருக்குடும்ப சபையின் முதல் உருவாக்க காலம் ஆரம்பமானது. பயிற்சியின் கால அட்டவணையானது தினமும் கட்டுக்கோப்பு நிறைந்து காணப்பட்டது. எம்மை இறைவிசுவாசத்தில் ஆழப்படுத்தி உருவாக்வேண்டிய பொறுப்பு நிறைந்த சூழமைவை ஏற்படுத்தியது.

நாளாந்தம் நடைபெறும் ஒன்றுகூடல்கள் பல சிந்தனைகளையும் வினாக்களையும் எம்மில் எழுப்பின. எம்மை நெறிப்படுத்தியவர்களின் ஊடாகப் பல வகையான கற்றலையும், இறையன்பையும் இறைவார்த்தை அறிவையும் பெற்றோம். 1956 ஆண்டு மார்கழி மாதம் எமது முதல் அர்ப்பணம். எம் பெற்றோரின் வருகையும் அவர்களது ஆதரவும் எமக்கு வலுவூட்டியது. சொற்ப கால இடைவெளியில் சிலர் எம் குழுவிலிருந்து விலகியது துன்பத்தை கொடுத்தது.

தியான இல்லத்ததை பிரியும் காலம் வந்தது. தாய்மடம் என அன்று அழைக்கப்பட்ட இளவாலை மடம் சென்றடைந்தோம். அருட்சகோதரிகள் அன்புடன் எம்மை வரவேற்றனர். அங்கே பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டு உறுதியடைய வாய்ப்புக் கிட்டியது. சில காலம்

வெளிப்பங்குகள், குழுக்கள் மத்தியில் எம் பிரசன்னம் பலரைக் கவர்ந்தது.

அத்துடன் இளவாலையில் மலர்கள் விரிந்த பூந்தோட்டமும், அதன் மத்தியில் அதிகமான அருட்சகோதரிகளும், பிள்ளைகளும் காணப்பட்டனர். பொழுதுபோக்கான நேரங்களில் குதூகலிப்புடன் நாம் பேசி மகிழும் ஒரு நந்தவனக் காட்சியாகவும் அமைந்தது.

எம்மவரது புதிய உடையும், தோற்றமும் அர்ப்பணத்தில் நாம் எடுத்துக் கொண்ட துறவறப் பெயர்களை மனனம் செய்து சகோதரிகளைக் கூப்பிடுதலும் குதூகலத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. எம்மில் சிலர் ஆசிரியர்களாகவும் பலா் ஏனைய கல்வித் தகமை உடையவர்களாகவும் இருந்தோம். எமது வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும் சமநிலையாக முதிர்ச்சி பெறுவதற்கு முயன்றோம்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆசிரியப்பணி, பங்குப்பணி, விடுதிச்சலைப்பணி, இடப்பெயர்வு முகாம்களின் பணி ஆகியவற்றுடன் ஏழைகளையும் இனங்கண்டு தேவைக்கேற்ப நெகிழும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துதல் ஆகிய நடைமுறைகளில் சகோதரிகள் ஈடுபட்டு வந்தோம்.

நாம் பெற்றுக்கொண்ட விசுவாசம் என்ற ஆணிவேர் இறைவன் மாத்திரம் என்ற நோக்குடன் நாம் முன்னேறிச் செல்வதற்குத் தூண்டுதலாக உள்ளது. எம்மில்பலர் இயலாமையிலும் நோயிலும் திருக்குடும்பச் சபைக்கும் இறைவனுக்கும் அளித்த அர்ப்பண உறுதியைப் புதுப்பித்தவர்களாய்த், தொடர்ந்து இயன்றளவு ஆர்வமுடன் குழுக்களில் எம் இருத்தலினாலும், கையளித்தலினாலும், செபித்தலினாலும், பங்கு கொள்கின்றோம்.

"life is a gift and 60 years in religious life is really a bonus." எம் நீண்ட வாழ்வானது இறைவனால் மேலதிகமாக எமக்குக் கொடுக்கப்பட்ட நன் கொடையாகும். தொடர்ந்து எமக்குக் கிடைத்த அனுபவ வாழ்வானது எம் குழுக்கள் மத்தியிலும், சமூகத்திலும், திருச்சபையிலும் சிறப்பாகக் குடும்பத்திலும் நிறைந்த பலனைக் கொடுக்க வேண்டும் என்பதே எம் ஆவலாகும். "இறைவனுக்கே மகிமை"

Sr. Bosco

## Questions!!! In the Houses of Nazareth!!!

The families who follow the footsteps of the Holy Family face a lot of challenges today. Why did you search me? Jesus' question addressed to Mother Mary and his own responses made mother Mary to surprise and she kept inside and reflected all. Today our society is fully changed. Our parents try their best to keep everything within and become sickly by blood pressure, diabetics paralyzed and mentally affected. We come across these situations in our daily visits to families.

Therefore our social situation is deciding our family living. In which way we can live and in which way we can help other families to live. The development of social communication technology, globalization, consumerism and the fast movement of this world is connecting us to the society and in the same way disconnecting us from the society.

The fast development of technology is paving path for "our own way", "own wish", "own action", and pushing each member to live as individual person. This individualism is very much influenced in the families. The Present society is welcoming these sicknesses as newness and development. Therefore the value of "communion" is vanishing from the society. We can observe "communal work", Cluster families", "group living", "Intergral cooking", communal celebration and events", family tour", and moving together are reducing, and the relationship, solidarity, sharing, and the unity is going far away from our developed society.

"Accept me as I am or leave me on my own" this is the problem among the newly married couple. Both of them expect the change from the other person. No one is ready to make changes in his/ her life. Why should I change?? This is a common question in the married life. Each one is very busy and closed with his/her job or task. At the same time very far from each other and family living. The world is inside the house but the members are very far from each other under the same roof. There is no time for expression of feelings and love but the depression is filling the space and time of each others.

Taking responsibility in the families is another matter regarding the aged, elderly, sick and disabled parents or blood sisters and brothers

or relations. Why only myself? In days of small. when the child asked questions the parents and the relations appreciated that he is intelligent, but now the parents cry for their inability to answer their unloving children's questions which very much hurt them. These are all changes in the developed society.

At this point who is going to take responsibility to start? There must be a person to help. Yes. We the members of PBN family are called to go to the house of Nazareth. Yes. This ministry of ours is very valuable. "Building communion" in the families is a very sensible and demanding ministry today. It is not fast as technological work but the walk of a turtle. We need to sow the seeds of love, patience, spending time, respecting the person's space and time etc… Trust communication is important. Mutual trust is very important. We are challenged to update ourselves fromtechnological studies and seminars. We need to make use of these skills and knowledge in this ministry. Especially we need to talk the world languages, inclusive languages and multi-meaning languages in order to build relationship and communion in families.

New ventures are taking places in our ministries according to the signs of the times. We live very close to the wounded society as well as the fast moving society. Though there are challenges, we are moving. We go beyond the boundaries too with many programmes and mobile services for the women headed families and for the war victims of young and old.

Still the ASIPA gatherings, Parish church prayer services, group gatherings, Eucharist celiebrated in ASIPA gatherings... are valuable opportunities for us to meet all people in one place. These are the proper places where all family members come together. We can allow each one to speak out in these functions about their feelings, dreams or ambitions for their society. For example the grand parents will express their worry about their garden, trees, the fresh oxygen and the relationship with the nature. They look into the future desert and worry about their grand children running behind technology without caring for earth and environment.

The Holy Spirit showered love, understanding, respect and acceptance in the Holy Family of Nazareth. The three members of the

Holy Family listened to Holy Spirit and lived the simple life, the love, and unity in that family.

Today the probation officers' involvement is discouraging us in continuing this ministry of caring for the children from broken families. Anyhow in the society the broken families and the increase of broken hearted children are still in need of a house of Nazareth. Let us spend a little more time with the parents in the houses of Nazareth. They received the love and life- giving energy from God. They are the co creators of lives. Let us bring all the families which we meet in deep contemplation and send our vibration of love and communion to these houses of Nazareth. Holy Spirit helps them in their questions among the family members. Don't be discouraged in this ministry of building communion among the families and allow them to respond to their questions.

Visit houses of Nazareth…..Build communion….. enjoy our ministry of building Communion.

Sr. Theophane Croos
Vavuniya



# இவ்வழிச் சென்ற இனிய மனிதனின் இரக்கச் செயல்கள்

இரக்கம் என்பது இறைவன் மனிதரைச் சந்திக்கின்ற மாபெரும் செயலாகும். இறைவனையும் மனிதரையும் இணைக்கின்ற உறவுப்பாலம். இரக்கம் என்றால் அது மிகையாகாது. இயேசுகிறிஸ்துவே, இறை தந்தையின் அளவு கடந்த இரக்கத்தினை வெளிப்படுத்தும் பிரசன்னமாவார்.

எமது ஸ்தாபகரின் வாழ்விலே, இவ்விரக்கம் பல்வேறு கோணங்களில் இழையோடி இருந்தது. மூன்று வயதுச் சிறுவனாக இருந்த போது, வழமை போல் ஓடிச்சென்று, தாயின் மடியில் உட்கார்ந்தார். தாய் ஒரு வார்த்தையும் பேசாது இருந்தவேளை, கவலையுடன் அன்னையின் முகத்தை உற்று நோக்கினார். பின்னர் அவரது மடியில் ஏறி நின்று தனது சிறிய கரங்களினால் அன்னையின் தலையை நிமிர்த்தி, அவரது கண்களில் ஒரு துளி நீரும் இல்லாதவரை மாறி மாறி முத்தமிட்டு அன்னையை நோக்கி "அம்மா நான் உங்கள் கண்ணீர் யாவற்றையும் பருகி விட்டேன் இனி நீங்கள் அழ வேண்டாம்" என்று கூறினார். இச் செயற்பாட்டில் இருந்து பியன்வெனு தாயிற் கொண்ட பாசம், அன்பு, இரக்கத்துடன் கூடிய செயலாக அமைந்தது வளர்ந்து வரும் காலத்தில், ஆண் பிள்ளைகளுக்குரிய குறும்புத்தனம் அவரையும் ஆட்கொண்டு, அக்குறும்புத்தனத்தை ஆசிரியர் கண்டித்த போது, கோபத்துடன் மைப்போத்தலைத் தூக்கி எறிந்து ஆசிரியருடைய ஆடையை அசுத்தப்படுத்தினார். தனது செயலைச் சொல்வதற்கு வீட்டிற்கு ஓடோடிச் சென்று தாய்க்கு எடுத்துரைத்தார். தாயுடன் பாடசாலைக்கு வந்து, நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்து ஆசிரியரை அமைதிப்படுத்தினார். இவ்வாறு குடும்பமே யாவற்றிலும் இணைந்து செயற்பட்டது.

பியன்வெனு நகர் புறங்களை தவிர கிராமப்புறத்தில் அதிகம் பற்றுக் கொண்டார். ஒரு முறை, அவர் போர்டோ நகரத்தின் பொது வீதி வழியாகச் சென்று கொண்டு இருந்த போது, மாடி இல்லமொன்றின் மேற் தளத்தில் இருந்து நெருப்புச்சுவாலை கொழுந்து விட்டு எரிவதை கண்டார். அவர் வேகமாக மேலே சென்ற போது கதவு மூடப்பட்டிருந்தது எனவே, ஏணி ஒன்றைப் பெற்று சாளரத்தினுடாகச் சென்று தனது

உயிரையும் பொருட்படுத்தாது, அங்கிருந்த ஏழைப் பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ஆயினும், அப்பெண் ஏற்கனவே நெருப்பு சுவாலையினால் சூழப்பட்டு விட்டார். அவர் அவளைக் காப்பாற்றுவதற்காக எடுத்த முயற்சிகள் யாவும் விழலுக்கு இறைத்த நீராயிற்று.

ஒரு தடவை பியன்வெனு அவரது நண்பர்களுடன் பொதுப் பூங்காவில் விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, கவர்ச்சியான தோற்றமுடைய நண்பன் பலசாலி போல் தோன்றினாலும் சண்டையில் தன் மேல் இர்க்கம் காட்டும்படி பியன்வெனுவிடம் இரந்து வேண்டினான். பியன்வெனு தனித்து நின்று மாற்றானின் கழுத்து பட்டியை வெற்றியின் சின்னமாகச் சுவிகரித்து கொண்டார். வெற்றி வாகையை விட இரக்கம் மேலோங்கியது.

ஓரிரவு களியாட்ட அரங்கிற்குச் செல்லும் வழியில் அவலமான அழுகைக் குரலொன்று அவரது செவிகளில் வீழ்ந்தது. அவ்வழுகைக் குரல் வந்த, அந்த இல்லத்தினுள் அவர் நுழைந்த போது, மரணத்தை நெருங்கி கொண்டிருந்த தனது அன்னையின் அருகாமையில் இளம் பெண்ணொருவர் அமர்ந்திருப்பதைக் கண்டார். களியாட்ட விழாவிற்கு செலவழிக்க வைத்திருந்த பணம் முழுவதையும் வைத்தியருக்கு கொடுத்து. நோயாளியின் உயிரைக் காப்பாற்ற உதவி செய்தார். இச் சம்பவம், அவரது இரக்கச் செயலின் உச்சக் கட்டமாக அமைகிறது. இவ்வாறு பியன்வெனு உதவி தேவைப்படும் போது உதவி செய்தும், தேவையற்ற இடங்களில் அவற்றில் நின்றுவிலகியும் வாழ்ந்து வந்தார்.

எனவே திருக்குடும்பச் சகோதரிகளாக அழைக்கப்பட்ட நாம், இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டிலே ஸ்தாபகரின் வழிகளைப் பின்பற்றி, இறை இரக்ககச் செயல்களிலே முன்னேறிச் செல்வோமாக:

அருட்சகோதரி மரிய கிளாறா

# இரக்கத்தின் ஆண்டில் அர்ப்பண வாழ்வு ஓர் உன்னத வெளிப்பாடு

கிறிஸ்து இயேசு பரமேறுமுன் நமக்குக் கொடுத்த கட்டளைகளில் ஒன்று "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்"(மாற்16.:.15)என்பதாம்.ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளான். பரலோக மந்திரத்தின் முற்பகுதியிலும், இறைராட்சியம் இப்பூவுலகில் கட்டப்படுவதற்கு மனிதனின் பங்கு தேவைப்படுகின்றது. அர்ப்பண வாழ்வு இன்றி மனிதன் நிறைவேற்ற முடியாது. துறவியர் இதனை ஊர் ஊராகச் சென்று இதனை நிறைவேற்றும் அதேவேளை பொது நிலையினர் தம் சாட்சிய வாழ்வு மூலம், தாம் இருக்கும் இடத்தில் இருந்தே மக்களை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்த முடியுமல்லவா?

அர்ப்பண வாழ்வு இன்றி மக்களைக் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆதாயப்படுத்த முடியாது. அர்ப்பண வாழ்வு வாழ நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் பிறக்க வேண்டும். (யோவா 1.12-13) உண்மையை விரும்புபவர்கள் அனைவரும் இயேசுவின்பால் ஈர்க்கப்படுகின்றனர். (யோவா 18.:.37) இயேசுவின்பால் ஈர்க்கப்படும் அனைவரும் சத்தியத்தை அறிந்து கொள்ள விரும்புவர். அதுவும் அவர்களை விடுவிக்கும். (யோவா8.32) சத்திய வேதத்தின் மொழி வேதாகமம் ஆகும்.எப்பொழுதும் தேவன் கூறியதை நாம் அறிக்கை செய்யும் போது நமது உரையாடல்களில் இறைவனோடு ஒத்துப்போகின்றோம். நமது உள்ளமும் வார்த்தையும் ஒத்துப்போகின்றோம்.நமது உள்ளமும் வார்த்தையும் ஒத்துப்போகும் போது அர்ப்பண வாழ்வுக்கு அடிப்படையான மனநிலை உருவாகின்றது. (இ.ச30:11-14)

இதனை நிறைவேற்ற நிறைந்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். "ஏனெனில் மனிதர்களோடு மட்டும் நாங்கள் போராடுவதில்லை. ஆட்சி புரிவோர், அதிகாரம் தாங்குவோர், இருள் நிறைந்த இவ்வுலகின் மீது ஆற்றலுடையோர், வான்வெளியில் உள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் நாம் போராட வேண்டியவர்களாக இருக்கின்றோம். (எபே6.12). அதுவும் அர்ப்பணித்த வாழ்வு வாழ்பவர்களுக்கு சவால்கள் மிகுதியாக வரும் என்பது கண்கூடு. இதனை மேற்கொள்ள ஆவிக்குரிய பட்டயங்களை நாம்

எடுத்துக்கொள்ள வேண்டுமென பவுல் அப்போஸ்தலன் நமக்கு அறிவுறுத்துகின்றார். (எபேசி6.13)
இன்றைய நவீன உலகில் பாவங்கள் பல மலிந்து காணப்படுகின்றன.

- தியாகமற்ற வழிபாடு
- கொள்கையற்ற அரசியல்
- உழைக்காமல் வரும் செல்வம்
- மனச்சாட்சிக்கு புறம்பாக கிடைக்கும் சந்தோஷம்
- குணம் இல்லாத அறிவு
- ஒழுக்கம் இல்லாத வியாபாரம்
- மனிதாபிமானமற்ற அறிவியல்

இத்துடன் பவுல் அப்போஸ்தலன் 2 திமோ:13.1-2 இல் கூறியபடி கொடிய காலமே இப்போது நடைபெறுகின்றது. இவைகளின் ஆதிக்கம் கிறிஸ்தவ வாழ்வுக்கு பெரும் சவாலாக விளங்குகின்றது.

இன்று இத்தனை விஞ்ஞான வளர்ச்சி கண்டும் தொடர்பு சாதனங்கள் இருந்தும் ஆமோஸ் 8:11இல் கூறியபடி தேவ வார்த்தைப் பஞ்சம் நிலவுகின்றது. ஏனெனில் அர்ப்பண வாழ்வு வாழ்வோர் மிக அரிதாகிக் கொண்டு வருகின்றனர். நாம் இறைவார்த்தையை அறிக்கையிடும் போது ஒருவருக்கொருவர் அனல் ஊட்டுகின்றோம். விசுவாசத்தில் வளர, திளைக்க இது அவசியமாகின்றது. தேவ வார்த்தையும் சாட்சிய வாழ்வுமில்லாமல் அனல் ஊட்டுவது எப்படி?

தொடர்பு சாதனங்களின் பெருக்கமும், அதைக் குழந்தைகள் முதல் பெரியவர் வரை எந்த சிரமமும் இல்லாமல் அடையும் தன்மையும், நல்ல விழுமியங்களை விட கெட்டவைகளையே மக்கள் இலகுவாக தம்மை அறியாமலே உள் வாங்கிக் கொள்கின்றனர். அதற்கு அடிமையாகி விடும் போக்கு நிலவுவதை நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. இதனால் ஏற்படும் சமுதாயச் சீர்கேடுகள், பேரழிவுகள், வியாதிகள், மரணங்கள் பற்பல. இதனால் குடும்பங்களில் சண்டையும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வுக்கு இவைகளின் வளர்ச்சி ஒரு சவாலாகவே விளங்குகின்றது. பெரியவர்களும், படித்தவர்களும், சமுதாய நலன்விரும்பிகளும், நல்லவர்களும் கூடவே இவற்றிற்கு அடிமையாக இருப்பதைக் காண முடிகின்றது. இரத்த வாடை ஒரு மாமிசப் பட்சினியான ஓர் மிருகத்தைத் தூண்டுவது

போல தொடர்பு சாதனங்களின் கவர்ச்சி மனிதனின் உணர்வுகளைத் தூண்டி சீரழிக்கின்றன.

உலகத்தில் மிகவும் சொற்பமாகக் கிடைப்பது புனிதம். இதனை அடைய ஒரு வீரனுக்குரிய உழைப்பு வேண்டும். அன்பு, நீதி, மன்னிப்பு, பொறுமை என்பவற்றை தன் ஆயுதங்களாக்கிக் கொள்கின்றான். மேலே கூறப்பட்ட தடைகளை இயேசுவின் துணைகொண்டு வெற்றி கொள்வான். அர்ப்பணித்த வாழ்வு வாழ்பவன் ஒரு வேதசாட்சியின் மனநிலையைக் கொண்டிருப்பான். ஏனெனில் இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை.

இறைவன் தாம் முன் குறித்து வைத்தோரை அழைத்திருக்கின்றார். தாம் அழைத்தோரைத் தமக்கு ஏற்புடையோராக்குகின்றார். தமக்கு ஏற்புடையோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்வார். (உரோ 8.20).

திருவாளர் யோசப்
பொதுநிலை அங்கத்தினர்
யாழ்ப்பாணம்.



## Old Brother Stanislaus

I read a short story named, “The brother and the rooster” by Dorothy Day. The moment I finished reading, the life of old brother Stanislaus left a strange feeling of sadness in me, also it made me to think how he was very faithful to God through very little things that he did with love until his last day. He was lonely but never gave up loving God and God’s creatures. Thus, God rewarded him by not allowing him to suffer further, undergoing the despair of life without his soul companion – the small rooster.

After his transfer to America, the poor brother found very difficult to get used to the new way of living; there were many novices and young brothers, but he always felt isolated. He was given the responsibility to take care of animals, work in the vegetable and flower garden. He got up at 5 in the morning, worked the whole day but every evening for half an hour, he had time for spiritual reading, during which he dozed well. In his old age, he experienced so much of loneliness, frailty and tiredness – his brother companions were not able to understand his feelings; they could not be blamed either, for they were simply keen on their own work, religious practices and responsibilities. Each one was lost in his own world of religiosity. There was no space for relationship. However, the natural source of love longs for company, an acceptance of other beings. So Brother Stanislaus found a companion - a small tender Rooster. He had petted and raised it until it came to know him very well.

Their friendship began every morning when he opened the barn, they greeted each other, “God has given us a fine morning” he spent some minutes with his soul companion and left for others. During his work, he used to recite rosary, prayers and spiritual practices when he spent long time in the garden and in the fields. . His prayer during the day was to have a shower in the evening, because his arms ached carrying the big buckets to water the flower garden every day.

At the end of five years, his responsibility was changed. He was transferred to the kitchen as a cook and another brother was to help him

to set the table and dishes. He loved being outdoors with animals but did not love preparing food. This made him so embarrassed – for him; the kitchen work seemed to be never ending. He had to prepare meals for 35 people; 25 novices 5 brothers and 5 priests. After cooking, he had to wash pans and pots, sweep, mop and then prepare for the next meal. He motivated himself by enjoying the communion of saints pondering heaven and conversing with saints. This gave him a kind of joy and relief during his hard time and in his mental agony. He was glad to do things with smiling face thinking - 'suffering here is better than in purgatory', he tried to be realistic and holistic - but more than anything the rooster who enabled him to be more in touch with. Somehow, he had a short time to greet his small little brother rooster before he started preparing breakfast; then he will go to throw the vegetable peelings during recreation. After dinner he used to sit under a tree, smoking his pipe while talking with his friend. He used to enjoy the music of the singing sparrows and busy flies. These special moments made him so happy with nature

One Thursday as he finished lunch, there were some minutes left before he had to return kitchen. He heard one brother telling Brother Gerard, that he was now given the responsibility to take care of animals and fields, to kill the roosters for Sunday meal. Immediately Bro. Stanislaus rushed to inform bro. Gerard, who is much younger to him, that he would help him to catch the roosters; he also told him to be careful about his little friend. However, this poor polish brother's request expressed in his broken English did not trouble him Bro. Gerard was little careless about the world around him.

While preparing supper Bro. Stanislaus was not at peace, during which several times he went out to remind Bro Gerard to be careful about his rooster, but brother Gerard was somewhere else killing chickens while muttering prayers. Bro. Stanislaus could not go too far having a check; helplessly he returned to cooking. During supper, he was not able to eat anything, he was tensed. Soon after supper he got some handful of grains went to the barn and called out his young tender rooster but there was no response!

*"His hands trembled as he took out his old pipe; his heart was bitter and anger arose in him. His little pet, his tender joyous little rooster, who alone out of the entire world has a loving heart for him, was gone. Bro. Stanislaus wept".* (This section in italics is directly from the text)

Sitting down heavily on a log, he felt as if the world had suddenly become empty; the song of sparrows and the sound of bees even the moving leaves soundedso quiet to him. He sat there for a long time; the anger towards Bro. Gerard was so furious. Then it turned into regret and after some time he prayed for Brother Gerard whom he hatred for killing his dear friend. Finally, he muttered - it must be the 'will of God', and then returned to his pots and pans, as they had to be washed before resting.

Two days after, while cooking his tender loving friend, he said to him "you are all I had; now God will know what a lonely old man I am".

Brother Stanislaus died on the same day when he was washing pots and pans and was filled with joy.

Based on this story I read, I re-produced it in my own simple, narrative style. Brother Stanislaus' life is a great example –of how an enduring, average and humble religious person feels about one's life at old age - longing to love and to be loved; to be understood; to be in relationship with all. This is a lesson for me to reflect on my life – to act serenely, accepting everything with love and passion as it comes on my way. This also is a call to develop the ability to be empathetic towards elders and be supportive to them when they are weak. It encourages me to lead a very simple life, experiencing the warmth of God's love through genuine relationships and bonds.

**Sr. Annie**

# கேள்வி கேட்கும் சமூகமும் எமது அழைப்பும்

திருக்குடும்பத்தின் முன்மாதிரியைப் பின்பற்றி வாழும் குடும்பங்கள் இன்று எதிர் நோக்கும் சவால்கள் அதிகம் அதிகம். ஏன் என்னைத் தேடினீர்கள்? என இயேசு கேள்வி கேட்டதும், அவரே பதிலுரைத்ததும், கேட்கப்பட்ட கேள்வி பதிலின் நிமித்தம் அன்னை மரியாள் வியப்படைந்ததும், அதை உள்ளத்தில் இருத்தி சிந்தித்ததும் நாம் அறிந்துள்ளோம்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகம் முற்றிலும் மாறுபட்ட தன்மையைக் கொண்டுள்ளது. அதாவது உள்ளத்தில் மறைத்து வேதனைப்பட்டு இரத்த அழுத்தம், சீனி வருத்தம், பாரிசவாதம், மனநோய் எனப் பலவிதமான துன்பங்களுக்குள் சிக்கித் தவிக்கும் பெற்றோரையே நாம் அன்றாடம் சந்திக்கின்றோம்.

எனவே எத்தகையதோர் குடும்ப வாழ்வை நாம் வாழவும், மற்றவர்கள் வாழ உதவவும் முடியும் என்றால் அதைத் தீர்மானிப்பது எமது சமூக சூழமைவே என்பது உண்மையான கருத்து. இதில் உலகமயமாதல், தொலைத் தொடர்பு சாதனங்களின் அதிகரிப்பும், இணையத்தளத்தின் இன் அதிவேக வளர்ச்சியும், மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த அதிவேகம் தான், ‘‘தன் வழி’’, ‘‘தன் விருப்பம்’’, ‘‘தன் செயல்’’ என்ற தனித்துவ சுற்று வட்டத்தை குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் போட்டுக் கொள்ள வழி வகுத்தது என்பதை நாம் மறுக்க முடியாதவர்களாக உள்ளோம். இந்தத் தனித்துவம் இன்று எம் குடும்பங்களுக்குள் ஆழ ஊடுருவி, ‘‘கூட்டு’’ என்ற சமூகப் பண்பை மாற்றியமைத்து விட்டது. இன்று நாம் கூட்டு முயற்சி, கூட்டுக் குடும்பம், கூட்டுச் சமையல், கூட்டுக் கணக்கு, கூட்டுத் தொழில், கூட்டுப் பயணம், கூட்டுச் சுற்றுலா எனப் பலவிதமான கூட்டுச் செயற்பாடுகளை இழந்து இதனால் உறவு, ஒற்றுமை, ஐக்கியம், பகிர்தல் என்ற பண்புகளும் சிறிது சிறிதாக தூரம் சென்று போவதை நாம் அவதானிக்க முடிகிறது. ‘‘இருப்பது போல் என்னை ஏற்றுக் கொள்’’ அல்லது ‘‘அப்படியே விட்டு விடு’’ இதுவே இன்றைய திருமண வாழ்வில் வரும் குழப்பங்கள். இன்று எவரும் தன்னில் மாற்றத்தை உருவாக்க நினைப்பது மிகவும் குறைவே. ஆனாலும் மற்றவர் மாற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மிகவும் அதிகமாகவே உள்ளது. ஏன் நான் மாற வேண்டும்??? இது ஒரு பொதுவான கேள்வி இன்றைய குடும்பங்களில். அவரவர் அவரவரின் தேவைகளில் மூழ்குவதால் ஒருவர் இன்னொருவரில் இருந்து தூரவே

வாழுகின்றனர். மாற்றத்தை மற்றவரில் எதிர்பார்த்து மனமடிவுக்குள் மூழ்கி நோயாளர்களாகத் தவிக்கின்றனர். இதிலே யார் தலைமைப் பொறுப்பை முன்னெடுப்பது? இங்கே தான் மற்றவரின் உதவி தேவைப்படுகின்றது. இதுவே எமது பணிக்கான அழைப்பாகவும் இருக்கின்றது. இது அதிவேகமாக செயற்படாது. ஆமை வேகம் தான் என்பது எமது சிந்தனையில் இருத்தல் அவசியம். நாம் இந்த தொழில்நுட்பப் பாடங்களை இன்றைய காலத்தில் கற்பதும், பயன்படுத்துவதும் இந்தப் பணிக்காகவே என்பதை மறக்கலாகாது. இதை மறக்கும் போது நாம் எம் அழைப்பை, பணியை மறந்து போகின்றோம்.

குடும்பங்களில் அடுத்த படியாக அமைவது பொறுப்பேற்றல். வயோதிபப் பெற்றோரை ஏன் நான் மட்டும் பராமரிக்க வேண்டும்? அவன், அவள் பிள்ளை இல்லையா? நோயில் துன்புறும் சகோதர சகோதரிகள் மட்டிலும், ஊனமுற்றவர்களின் மட்டிலும் கூட இதே நிலை தான். அதே கேள்வி தான்.?? சிறிய வயதில் கேள்வி கேட்கும் குழந்தைகள் மிகவும் கெட்டிக்காரர் எனப் பெற்றோர், பெரியவர்கள் போற்றினர் அன்று. ஆனால் இன்று கேள்வி கேட்கும் தம் வளர்ந்த குழந்தைகளை நினைந்து குமுறி அழும் பெற்றோரே அதிகம். எல்லாமே மாற்றம் தான். இதுவும் வளர்ச்சிப்படி தான். ஆனால் துன்பம் கலந்ததாகவே அமைந்து விடுகின்றது.

எமது பணியானது காலத்தின் தேவைக்கு எற்ப மாறுபடுகின்றது. சில பணிகள் தொடரப்படுகின்றன பாரிய மாற்றங்களுடன். ஆனாலும் பல பணிகள் எமக்கு சவாலாகவே இருக்கின்றன. பல புதிய பணிகள் செயற்திட்டங்கள்(குடும்பப் பொறுப்பேற்ற பெண்களின் தலைமைத்துவம்) காலத்தின் தேவைக்கு ஏற்ப விருத்தியடைந்துள்ளன. ஆனாலும் எமது ஐக்கியத்தை உருவாக்கும் பணியில் அதுவும் குடும்பங்களில் நாம் எங்கே நிற்கின்றோம்???

அன்பிய ஒன்றுகூடல்கள், ஆலய வழிபாடுகளின் ஒன்றுகூடல்கள், பல்வேறுபட்ட குழுக்களின் ஒன்றுகூடல்களில், நாமும் பங்குபற்றுதல் எமக்கு வலுவூட்டும் உதவியாக அமைகின்றது. வீடுகள் சந்திக்கச் செல்லும் போது தான் பெற்றோர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், வயோதிபர், நோயாளர்களை ஒன்றாகச் சந்திக்க முடிகிறது. இந்த அரிய சந்தர்ப்பங்களை நாம் தட்டிக்கழிக்கலாகாது. விழிப்பாக இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முதல் ஆசான் குடும்பம். இந்தக் குடும்பத்திலே அன்பைப் பெறவும், கொடுக்கவும், நம்பிக்கையை வளர்க்கவும்,

மகிழ்வை அனுபவிக்கவும், கற்றுக் கொள்கின்றனர். ஆனால் இன்று உடைந்து போன குடும்பங்களில் இருந்து இக்குழந்தைகள் எதைப் பெற்றுக் கொள்கின்றனர்? உடைவு தான். உடைந்த, உருக்குலைந்த, கட்டுக் கோப்பற்ற இந்தக் குடும்பத்தின் மத்தியிலே விழிப்பற்றவர்களாக நாமும் வாழ்கின்றோமா? விழித்தெழுவோமா? மகிழ்வை விதைக்க வழி தேடுவோமா??

திருக்குடும்பத்தில் அன்பு, விட்டுக்கொடுத்தல், விளங்கிக் கொள்ளல், அனைத்துமே தூய ஆவியால் பொழியப்பட்டது. ஆவியாரின் செயற்பாட்டுக்கு செவிமடுத்ததால் எளிமையான அந்தக் குடும்பத்திலே ஐக்கியம் அங்கே வாழப்பட்டது. இன்று அன்பால், காதலாற்கூடி, கிறிஸ்தவக் கடமைகளை முடித்துக் கொண்டாட்டங்களை மட்டும் நாடி, வேறுபட்ட கலாச்சாரத்தால் பிரிவுபட்டு வாழும் குடும்பங்கள் அதிகம். அத்தோடு இவற்றால் அதிகம் பாதிக்கப்படுவோர் குழந்தைகளே.



எமது குடும்பப் பணியில் வீடுகள் சந்திப்பில், நாம் அதிக நேரம் செலவிட வேண்டியது பெற்றோரிடனே. ஏனெனில் படைக்கும், விருத்தி செய்யும் இறை சக்தியைப் பெற்று, படைப்பாற்றல் என்னும் கொடையைக் கொண்டுள்ளவர்கள் இவர்களே. தமது பிள்ளைகள் மற்றவர்கள் அதிசயிக்கத்தக்கதாகப் பெறுபேறு பெற வேண்டும் என அதிகம் ஆசைப்படுகின்ற பெற்றோருக்கும், ‘‘ஐயோ என்னால் முடியாதென’’ தன் இயலாமையை எடுத்துச் சொல்ல முடியாது தவிக்கும் பிள்ளைகளுக்கும் நடுவில் நாம் என்ன செய்கின்றோம்? இந்தச் சவால்களை எவ்வாறு எதிர்நோக்குகின்றோம்? எமக்குக் கிடைத்த பயிற்சிகளும், எமது ஆழப்படுத்தப்பட்ட ஆழ்நிலைத் தியான செபங்களும் உறுதுணையாக இருக்கின்றன என்பதை அடிக்கடி நினைத்துக் கொள்வோம்.

தரித்து நின்று சிந்திப்போம், சந்திப்போம் குடும்பங்களை, வளர்த்திடுவோம் ஐக்கியத்தை, சிறிதளவாயினும் மகிழ்வும் நிறைவும் நாம் பெறுவோம் எம் பணியில்.

சிஸ். தியோவ்வீன் குரூஸ்
வவுனியா

## Get Closer To Our World

We live in a world where all
life: from an ant on the ground
to the tree in our garden to an
elephant in a forest are all
connected to us. They all help
to keep the earth alive. Though
we do not remember this, we are
only one small part in a giant system
Without them there will be no "us".
So let's be a little kinder and remember
that we need them more
than they need us.
Let's help to save our beautiful
world and the life within it.

## [illegible]

As Sri Lankans we are no strangers to garbage, It is on our streets, in canals, river, on the beach and even in wildlife parks. From small pieces of packaging and plastic tossed out of a car, to mountains of garbage that collect under "Do Not Leave Garbage Here"signs, the trash problem is everywhere.

An average Sri Lankan household would have a percentage of kitchen waste, paper, plastic, glass and metals in their weekly garbage. This comes from everyday things we use and no longer want. So when you throw something away, where is the 'away'? Garbage gets collected and taken away in a truck. Some of it gets recycled or some of it is burned, but most of it is buried in a garbage collection site also known as a landfill. Anything you throw away doesn't just disappear. In fact, it

stays around for a long time in these landfills. A glass bottle will survive for almost 1 million years, while a plastic bottle will last for 450 years.




If one has 2 bags of garbage a week, imagine how many bags of garbage that equates to, if you count all the garbage collected on our street, or city or country over a week.

With an increase in development we have started buying and using more and more things. This means more and more things are getting thrown into the garbage when they are not needed. In the hustle and bustle of everyday life, recycling isn't always the number one priority. But our environment is in need of greater awareness and care.

You may have heard of the three R's- Reduce, Reuse and Recycle. This is important because while we need to separate our waste and encourage recycling, we actually need to find ways to reduce using things we don't need. You don't throw garbage all over your house or room; you should also not throw things outside your house. Your garden, your street and the outside world deserve the same respect as your own home.




For example, you can buy a plastic bottle of water, but after you finish the water you may not reuse the bottle. So you should buy a good sturdy bottle and refill it before you leave the house each time. You can take this bottle everywhere you go and also encourage your family, and friends to do the same.

In addition to the three R's it's important to also learn to rethink your choices. Do you really need all the stuff you buy? Should you throw everything into the garbage or should you think about recycling?




Is there a way to use the things you already have instead of buying more stuff? Should you throw that wrapper on the ground, or can you keep it until you find a bin? Simple changes will lead to

bigger ones and before you know it, you will inspire those around you to also make changes. Let's learn to keep our homes, our cities and our country clean.




Next time you want to buy something you don't need, or you have litter to throw away, think twice. You can make a big difference. Remember, change begins with you. So be the change you want to see in the world!



Sr. Joiline

***We need to unite together,
to inspire everyone, to preserve
the earth for future generations.***

# பூமித்தாய்

இறைவா படைப்பின் முதல்வா
உன் கைவன்மையை எப்படி சொல்வேன்
அபூர்வமான தொடுகை அதிசய படைப்பு
உருவாக்கினீர் அழகான பூமித்தாயை
நீர் படைத்த இயற்கையோடு சேர்ந்து
நானும் அவளாக உம் புகழை பாடுகின்றேன்.
ஓங்கி வளரும் உயர்ந்த மரங்கள்
வண்ண வண்ண நிறங்களால் பூத்து குலுங்கும் - மலர்கள்
அவற்றின் தேனை உண்ணும் வண்டுகள்
பச்சை பசேலென கண்ணை கவரும் புற்கள்
சல சல என ஓடும் நீரோடை, அடர்ந்து வளர்ந்த
பச்சை காடுகள் அவற்றின் காவலனாக மிருகங்கள்
காலையில் உம்புகழை பாட பறவைகள்
ஓங்கி உயர்ந்து உம்மை மகிமைப்படுத்தும் மலைகள்
ஆகா எத்தனை எத்தனை அழகு
இத்தனையும் தாங்கி நிற்க பூமித்தாய்
அத்தனை மத்தியிலும் மனிதத்தை காக்கின்றாள்.



புதுப்புது புத்துணர்வுகளை எழுப்புகிறாள்
வாழ்க்கை பாடத்தை கற்று தருகிறாள்
மகிழ்தலும், புத்துணர்வும், தன்னம்பிக்கையும்
வேதனையும், நோவும் சவால்களும், இத்தனை
மத்தியிலும் வீரத்தன்மையோடு காக்கிறாள்
மனித குலத்திற்கு ஓர் வாழ்க்கை பாடமாக

பூமித் தினமான இன்நாளில் மனிதா விழித்தெழு!
உன் வாழ்க்கை படைப்போடு சேர்ந்து நடைபோடு
படைப்பை பேணி அழகுபடுத்தி வளரும் சமூகத்திற்கு
புத்துணர்வையும் புதுப்பொலிவையும் கொடுக்க
இன்றே எழுந்து படைப்பை பாதுகார் - புறப்படு
மானிடா விழித்தெழு!




வாழ்த்துவோம் இன்று எம் பூமித்தாயை
பாதுகாப்போம் பல அழிவுகளிலிருந்து
இதுவே எங்கள் கடமை
இதுவே எங்கள் பொறுப்பு
உறங்கும் இயற்கையை விழிக்கச் செய்ய
மரங்களில் பறவைகள் பாடல்கள் இசைக்க
அரவணைக்க வரும் தென்றலுக்கு இதழ் விரிக்க
மணக்கின்ற மலர்கள் சிரிக்கின்றன.
பூமியைப் பார்ப்பது மகிழ்ச்சி தருகிறது
மாறாத்தன்மை, அசைவின்மை, பொறுமை
அமைதி, தாங்கும் சக்தி முதலியவற்றின்
அடையாளமே எம் பூமித்தாய்
அன்னையைப் போல் அரவணைத்து
உன்னைத் தாங்கி நிற்கும் - மாதாவை
உன் வன்செயல்களால் காயப்படுத்தாதே
எழுந்து நடைபயில் புதியதொரு
சமுதாயத்திற்கு உன் காணிக்கையாக
உன் பூமித்தாயை பரிசாகக்கொடு
புறப்படு இன்றே உன் பூமித்தாயிடம்.



Pre- Novices

# The quality of a Teacher

Numerous qualities of teachers are described in ancient Tamil literature.
A teacher is born in a good family
S/he is compassionate at heart.
S/he has faith in the Divine.
S/he lives a principled life.
There is an integration of words, life and action in the life of a teacher.
S/he has a clear thinking.
There is clarity in communication.
S/he teaches in a pleasant manner.
S/he is neutral.
S/he remains good hearted without malice and ill will.
S/he accepts everyone without discrimination.
S/he has an ever smiling face.
S/he lives in harmony with nature.
S/he never turns to be harsh but always being gentle in words and behavior.
S/he is the embodiment of wisdom, knowledge and goodness.

***Sr Imelda Subajini.G***



# இரக்கத்தின் செயல்களால் துலங்கட்டும் அர்ப்பணவாழ்வு

நவீன உலகில் மனிதன் அந்நியப்பட்டு நிற்கின்றான். விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் வளர வளர உலகம் ஒரு கைக்குள் அடங்கிவிட்டது. கையில் உலகை ஏந்தும் மனிதன் உறவு, அன்பு, குடும்ப பாசம், கல்வி, வாசிப்பு, முன்னேற்றம், பகிர்தல் என்னும் பல நற்காரியங்களில் பிரிந்து நின்று அந்நியனாக வாழ்கின்றான். நன்மை பயக்கும் விடயங்களை விடுத்து தீமையை விரும்பி அதிலே மூழ்கி நிற்கின்றான். எல்லா மனிதரையும் தன்னகத்தே வைத்திருக்கும் இணையம், முகநூல், மடிக்கணணி என்பன எம் பிள்ளைகள் மட்டில் நாம் விழிப்பாக இராவிட்டால் பிள்ளைகளை திசை திருப்பிவிடும். பெற்றோர் கணணியைக் கற்றால்தான் பிள்ளைகள் எங்கே ஆன்மீகத்தை இழக்கின்றார்கள் என்பதை அறியலாம்.

இக்கலியுக காலத்தில் உலகப் போக்கை உய்துணர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டை இரக்கத்தின் யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். “உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்”(லூக் 6:36) எகிப்தில் அடிமைத்தனத்தில் இருந்து தம்மை மீட்ட இறைவனை இஸ்ராயேல் மக்கள் மாபெரும் இரக்கத்தின் கடவுளாகக் கண்டார்கள்.

திருமுழுக்கின் வழியாகப் பெற்ற அர்ச்சிப்பை இன்றைய உலகத்திற்காக வாழ திருக்குடும்ப ஐந்து கிளை அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டுள்ளோம். “நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்.”(யோவான் 15:16) இப்படியாக அழைப்புப் பெற்ற நாம், எமது நல்ல பிதாவின் கனவை நிறைவாக்க இரக்கச் செயல்களில் ஈடுபடுவோம். எங்கள் நல்ல பிதா ஆரம்ப காலத்தில் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தாலும் தனது இரக்கம் நிறைந்த இதயத்தில் எழுந்த எண்ணக் கருவால், திருக்குடும்ப சபையை நிறுவினார். பிரான்சிய புரட்சிக் காலத்தில் அனாதை மடங்கள்,

கிராமப்புற பாடசாலைகள், நாட்டுப்புற, பட்டண வைத்தியசாலைகளை உருவாக்கினார். அவற்றுடன் வயோதிபரைப் பராமரித்தல், நோயாளர், சிறைப்பட்டோரைச் சந்தித்தல், வறிய மக்களுக்கு உதவி செய்தல் என்னும் இரக்கச் செயல்களை ஆற்றத் தொடங்கினார். இவற்றை முன்னின்று செயற்படுத்த தகுதியுடைய அருட்சகோதரிகளையும், பொதுநிலையினரையும் உருவாக்கி பொறுப்புக்களை ஒப்படைத்தார். அவர் ஊன்றிய வித்து இன்று உலகெங்கும் அர்ப்பணவாழ்வு வேருன்ற வழிசெய்தது.

அழைப்பைப் பெற்ற நாம், காணும் உலகந்தான் என்ன? வாழ்வைத் தொலைத்த, ஆன்மீகத்தை இழந்த மக்கள், சண்டை, வாள்வெட்டு, கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல், விபத்து, விளம்பர ஏமாற்று, போதை, ஊழல், கையூட்டு நிறைந்த உலகைக் காண்கின்றோம். இந்த சூழமைவுக்குள் வாழும் நாம் செபித்தால் மட்டும் போதுமா? எங்கள் நல்ல பிதா பிரச்சனைகளைத் தேடிச் சென்றார், அவமானப்படுத்தப்பட்டார், கவலைப்பட்டார். எமது குடும்பங்களில் பிள்ளைகள் மட்டில் இரக்கத்தை ஊட்ட வேண்டும். எமது பண்பு, கலாசாரம், பழக்கவழக்கங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும்.

உலகில் யூத சமுதாயம், கல்வி, கட்டிடக் கலை, உடற்பலம், ஆன்மீகம், பல்கலைகள் என்று சிறந்து விளங்கினாலும் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பினார்கள். அவர்கள் ஒரே பாத்திரத்தில் சுற்றியிருந்து உணவு உண்பார்கள். பின் குர்ஆன் வாசிப்பார்கள். இரவு படுக்கைக்குச் செல்லுமுன் தங்கள் பிள்ளைகளை இருத்தி தாங்கள் யார் யாருக்கு அடிமைப்பட்டிருந்தார்கள்? யார் யார் தங்களைப் பகைத்தார்கள்? நாடு விட்டு நாடு சென்று அகதிகளாக வாழ்ந்தார்கள். எப்படி ஐக்கியமாக ஒன்று சேர்ந்து ஜெருசலேமைக் கைப்பற்றினார்கள் என்று கூறுவார்கள். றொபின் சர்மா கூறுகின்றார் “நாங்கள் வழி வழியாக சேமித்து வைத்த பண்டைய கலாசாரங்களையும், வாழ்வின் ஞானத்தையும், விவேகத்தையும் மற்றவர்களுக்கு கடத்திச் செல்லும் கருவியாக செயற்பட்டு அதை உலகம் முழுவதும் பரவச் செய்ய வேண்டும்” என்கின்றார்.

எனவே அந்தக் காலத்தில் உடைந்த கூரை வீடுகள்- உடையாத கூட்டுக் குடும்ப வாழ்க்கை, மூத்தவர் தலைவர், கூடிச் சமைத்தல் என வாழ்ந்தார்கள். இவ்வாழ்வுக்கு உறவு முறைகள் தேவை. எமது

பிள்ளைகளை உறவு முறையுள்ளவர்களிடம் அழைத்துச் சென்று உறவாடி பகிர்ந்து வாழ பழக்க வேண்டும். அங்கே இரக்கத்தின் செயல்கள் சுயமாகவே நடைபெறுவதைக் காணலாம். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம், மோசே, சாமுவேல், ஏசாயா, எரேமியா, ஆமோஸ் என்பவர்களும், புதிய ஏற்பாட்டில் பன்னிரண்டு துணைத்தூதர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்கள் இரக்கச் செயல்களுடன் கூடிய எடுத்துக்காட்டான வாழ்வு வாழ்ந்தார்கள். இந்த இறைஇரக்கத்தின் யூபிலி ஆண்டில் திருக்குடும்ப ஐந்து கிளை அங்கத்தவர்களும் இரக்கச் செயல்களால் எமது அர்ப்பணவாழ்வு துலங்க உழைப்போம். நல்ல சமாரியன் தன் கடமையை மறந்து தனது நேரத்தையும், பணத்தையும் கொடுத்து சாதி, மதம், மொழி பாராது உதவியதே பரிவிரக்கம். நாமும் எம்மை உடைத்து நான், எனது சொந்தம், பணம், மொழி எல்லாவற்றையும் கடந்து ‘‘இறைவன் மாத்திரமே’’ என்னும் மனநிலையுடன் இரக்கச் செயல்களில் ஈடுபட வேண்டும். இறைவன் படைத்த இந்த பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒரு கூட்டுக் குடும்பமே. இக்குடும்பங்கள் ஒன்றை ஒன்று நிறைவு செய்து அவற்றை வளர்த்து அடுத்த சந்ததிக்கு கொடுப்பதும் ஒரு இரக்கச் செயலே. நீதிக்குக் குரல் கொடுப்பதும் இரக்கச் செயலே. அன்னை மரியா இறைவனின் தாய். இரக்கத்தின் தாய். இறைசித்தத்திற்குப் பணிந்து ‘‘ஆம்’’ என்று பதில் கொடுத்து மீட்புத் திட்டத்தில் கடைசி வரை பங்கெடுத்தாள். இரக்கம் சுரக்கும் மனத்துடன் மலைகள் தாண்டி பல மைல்கள் நடந்து எலிசபேத்தை சந்தித்து ஆறு மாதங்கள் உதவி செய்தார். திருக்குடும்ப ஐந்து கிளை அங்கத்தவர்களும் நல்ல சமாரியனைப் போல், தேவ தாயாரைப் போல் வாழ்ந்து எமது அர்ப்பண வாழ்வை இரக்கச் செயல்களால் துலங்கச் செய்வோம்.

***“இறைவனுக்கே மகிமை”***

திருமதி பெ. கில்டா கெலன்
திருக்குடும்ப பொதுநிலையினர்
பாஷையூர்

# அன்பு செலுத்துவதன் அடிப்படைத் தேவை



அருளாளர் அன்னை தெரேசா அவர்கள் உரைகளிலிருந்து... ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு சூழலில், வெவ்வேறு முடிவுகள் எடுக்க வேண்டிய நிலை ஏற்படுவது இயற்கை. வேற்றுமைகளையும் மீறி, நம் அனைவரையும் கட்டிப்போடும் சக்தி அன்புக்கு மட்டும்தான் உண்டு. நீங்கள் ஒருரோடுஒருவர் உரையாடும்போது, கருத்து வேறுபாடு எழலாம். வேறுபாடுகள் எழுவது எப்படி இயற்கையோ, அப்படியே அதைப் பேசித் தீர்த்துக்கொள்ள நேரம் எடுக்க வேண்டியதும் இயற்கை. நம் குடும்பத்தினரால் நாம் காயப்படுத்தப்படும்போது, அதை மறப்பதற்கும், மன்னிப்பதற்கும் நாம் தயாராக இருப்போமேயானால் கடவுளின் அன்பை நாம் உணர முடியும். அன்பு செலுத்துவது எல்லா நேரங்களிலும் சாத்தியமான செயலல்ல... அதுவும் குடும்பத்தினரிடையே அன்பு எப்போதும் தொடரும் என்பது மிகவும் கடினமான செயல்தான். ஆனாலும், இல்லத்தில் நாம் அன்பு செலுத்தி, நம் மீதும் அன்பு செலுத்தப்படுமானால், அந்த அன்பை, சுற்றி உள்ளவர்கள் மீது நாம் செலுத்த ஏதுவான சூழல் உருவாகும். நம்மைக் காயப்படுத்துபவர்களை மன்னிப்பதும், நம்மை ஏமாற்றுபவர்களை மறப்பதும், நமக்கு துரோகம் இழைப்பவர்களைத் திருத்த முயற்சிப்பதும் அன்பு செலுத்துவதன் அடிப்படைத் தேவைகள் என்பதை நாம் புரிந்துகொண்டால் எங்கும் அன்பு நிறைந்து அமைதி பெருகி, வாழ்க்கை வளமடையும்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# Let us be faithful to the infinite Mercy of God

The year of mercy was solemnly declared open by pope France on the 8th of December in 2015 and to have its completion on the 50th anniversary of the 2nd Vatican council, which is a graceful event -par excellence the church has ever had in its entire history - it was a time; God has planned to renew all the spares of the inner life of all the faithful as a whole church.

The year of mercy is a privileged time indeed, for all the faithful to receive indulgences and abundant graces promised to all the believers.

Half the jubilee year, promulgated with the opening of the door of mercy at the Basilica of St .Peter the apostle is already completed, and the rest of which will come to its end on the 20th November 2016 the feast of the Christ the King.

God is infinite and eternal, merciful towards all His\Her creation as we see in the entire salvation history He\She is ever faithful to the eternal covenant, with His\Her unfailing unconditional, unlimited love and mercy –Jesus the Beloved and obedient son was faithful –from birth to death on the cross revealing the father's mercy for all in his words (parable) preaching and deeds Jesus was the perfect embodiment of God the father's mercy.

The Triune God is the model for love and mercy. The most holy Trinity is undivided love and Mercy. Hence, an example of love and inspiration to our Christian faith and moral. So let us also be one, united in sharing our love and mercy thus be the light and salt to all around us.

The sacrament of holy Matrimony and Holy Order are the channels of God's love and mercy, which have been given to us to be lived experienced and witnessed here on earth; for the foretaste of heavenly bliss. Unfortunately the couples seem failed realize the greater value of the sacrament.

Pope francs spoke in the session in Rome addressing the priests, nuns and parish workers on 16th June2016, said that the greater majority of our sacramental marriages are null because the couples do not know what the real marriage is and fidelity of their commitment to, during their marriage, as they fail to know the beauty of the sacrament and the main nature of the indissolubility till the end. As we know very well the Holy family – through 3 different personalities united as one is the perfect model of fidelity- united in the sacred bond of marriage, to the wedded couple but also for the total commitment for all consecrated person in religious life.

***J.A.Arul Thasan***

# அர்ப்பண வாழ்வு விடுக்கும் சவால்கள்

திருக்குடும்ப சபையானது ஐந்து அழைத்தல்களின் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு குடும்பமாக விளங்குகின்றது. இக்குடும்பமானது ஒரே மனப்போக்கிலும் ஒரே நோக்கிலும் ஒன்றிணைந்து வாழ்வதாலும், ஒருவரை ஒருவர் நிறைவு செய்வதாலும் குடும்பமாகிய திருச்சபைக்கு சாட்சியம் பகர்கின்றது.

இவ்வைந்து அழைத்தல்களில் உள்ள உறுப்பினர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள். இறைவன் தகுதி, தராதரம், உருவம் போன்ற குணநலன்களைப் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. இறைவன் மோயீசனை இஸ்ராயல் மக்களை மீட்பதற்கு அழைத்தார். அவர் பாவியாகவும் இருந்தார். திக்குவாயனாகவும் இருந்தார். இறைவன் தாவீது மன்னனை அழைத்தார். அவர் ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பனாகவும் இருந்தார். இவரை கோலியாத்தின் ஆணவத்தை அடக்கும் கருவியாகப் பயன்படுத்தினார்.

அன்னை மரியாவை அழைத்தார். இயேசுவின் தாயாக தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இயேசு சீமோன் இராயப்பரை அழைத்தார். சாதாரண மீனவராக இருந்தவரை திருச்சபையின் தலைவராக்கினார். இறைவனால் அழைக்கப்பட்ட இவர்கள் எதற்காக தெரிந்து கொள்ளப்பட்டாரோ அதை நிறைவேற்றுவதில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். இவர்களின் இந்த அர்ப்பண வாழ்வில் பல இன்னல்கள், இடையூறுகளைச் சந்தித்தார்கள் என்பதை பரிசுத்த வேதாகமம் எடுத்துச் சொல்கின்றது. இதனடிப்படையில்தான் எமது திருக்குடும்பச் சபையினர் ஐந்து அழைத்தல்களும் அமைத்துள்ளது. பியர் பியன்வெனு நோஆய் அடிகளுக்கு அருளப்பட்ட அருட்கொடை வழியாக நாம் இந்த அழைத்தல்களுக்கு உட்பட்டோம்.

எமது நல்லபிதா அன்னை மரியாளினால் வழிநடத்தப்பட்டார். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணங் கொண்டார். அவரின் கனவுகள்தான் இன்று பெருவிருட்சமாக வளர்ந்துள்ள ஐந்து அழைத்தல்களையும் உள்ளடக்கிய திருக்குடும்பசபை. இந்தச் சபையானது நாசரேத்தின் அடிச்சுவட்டில் அவர்களுடைய எடுத்துக்காட்டான வாழ்வை பின்பற்றி வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

அவர் இறைவனின் மீட்புத்திட்டத்திற்கு பங்காளி ஆனார். இறைவனின் அழைப்புக்குச் செவி கொடுத்தார் ''ஆம்'' என்று சொல்லித் தன்னையே அர்ப்பணித்தார். எனவே இவருடைய வாழ்வை, வழிநடத்தலை பின்பற்றிக்கொண்டிருக்கின்ற நாம், எம்மையும் திருச்சபையின் ஒழுங்குகளுக்கேற்ப அர்ப்பணித்ததுள்ளோம். அந்த அர்ப்பணத்திற்கு நாம் பிரமாணிக்கமாக வாழ்கின்றோம். இந்த அர்ப்பண வாழ்வு நாம் மரணிக்கும் வரை வாழப்பட வேண்டும். அதுதான் பிரமாணிக்கம். ஆனால் எம்மில் சிலர் இந்த அர்ப்பண வாழ்வை இடையில் முறித்துக் கொள்கின்றார்கள். அதுதான் நாம் எதிர்நோக்கும் சவால்கள். இந்தச் சவால் நிறைந்த வாழ்வை மரியாளும் சந்தித்தார். சீமோன் இராயப்பரும் சந்தித்தார். இப்படியான நிலையில் அவர்கள் அச்சவாலை எதிர்த்துப் போராடி அதனை முறியடித்தார்கள். அதுபோலவே நாமும் அப்படியான சந்தர்ப்பங்களுக்கு இடங்கொடுக்காது, எதிர்த்துப் போராடி வெற்றிகொள்ள இறைவன் எங்களுக்கு உந்துசக்தியைத் தரவேண்டும் என்று இறைவனின் கரத்தை இறுகப்பற்றிக்கொள்வோம். அழைத்தல், அர்ப்பணம், தியாகம் இவை மூன்றும் சேர்ந்தால்தான் நாம் இறைவனுக்குப் பணிபுரிய முடியும். இறைவனின் திருவுள்ளத்தை நிறைவேற்ற முடியும். அழைக்கப்பட்ட வாழ்வில் அர்ப்பணித்து தியாக சிந்தனையுடன் வாழமுடியும். இவற்றுள் ஒன்று குறைவுபடுகின்றதோ அவை எங்கள் வாழ்விற்குத் தடையாக, சவாலாக அமைந்து விடுகின்றது. எனவே இறைவன் கரம் எம்மைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். முன்னேறிச் செல்வோம், சவால்களை முறியடிப்போம்.

''எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே- என்னை
இடறவைத்துத் தள்ளப்பார்க்கும் குழியிலே
அத்தனையும் தாண்டக் காலை முன்வையடா
நீ அஞ்சாமல் கடமையிலே கண்வையடா''

போல் தேவநாயகம்
திருக்குடும்ப பொது நிலையினர்
யாழ்ப்பாணம்.

# Journey towards the wounded

We journeyed from Colombo to Valayarmadam in Mullaitheivu, to be with the wounded and suffering ones. Nothing welcomed us but the barren land, burnt trees and damaged houses, also the echo of the past bitter memories of these people. As we walked towards the village the atmosphere helped us to get into the shoes of the people. Even though they had lost everything, they had not lost the beauty of humanness within them and thus they welcomed us warmly. Still the memories of their loving gestures and their smiling faces take us back to their village even today. We the sisters who belong to four different congregations got this opportunity to be with our people in Valayarmadam and we tried our best to be flexible and adjustable in order to give ourselves to them fully to listen to their sad stories, during our mission of love.



We are privileged to be voluntary teachers for two schools in

Valayarmadam and Pokkanai. In Valayarmadam it was very painful to see the talented 15 small little flowers of grade 1-5 in a small hall with one teacher and the principal. In their difficult situation parents are very eager to educate their children so they travelled more than 2km every day. We too got the chance to share our knowledge with the children from grade 1-13 in pokkanai. Even though they have less facility and fewer teachers their knowledge is admirable. We taught them not only in the schools but also we conducted the evening classes and we had program from 3.30-5.30pm. In addition to our teaching mission from 6.00-10.00pm we visited 75 families. After listening to their painful stories, we able to strengthen their faith and encouraged them and raise them up through little ways we could, so that they can come up and build up their dignity in their lives once again.

The mission was a great challenge to me because it was the village where the last war took place and here the mother earth was covered with bones and stream of blood due to human violence. Still the scattered skeletons reminded me the lost brethren of our land. I also experienced the joy and the love of the youth. I am glad that God gave us this opportunity to be one with our people at least for five days. I am also grateful to Dean Sr. Devika and the Parish Priest of Valayarmadam for motivating us to do our mission there. Yes with a heavy heart I bade farewell to them but my assurance of prayers are always with them. I miss them but in spirit I am with our people in spirit. May God protect them and be with them always.

***Sr.Suganniya***

# இறை இரக்க ஆண்டின் பரிசு

இறைவன் அழைப்பு விசித்திரமானது ஆவியின் அழைப்பு ஆச்சரியமானது. அவ்வதிசயம் தான் லேவல்ல (கண்டி) தியான இல்லம் ஈந்த ஆழ்நிலைத் தியானம். அன்பர் இயேசுவில் இரண்டறக் கலந்து அது உப்பாய் கரைந்து சுவைக்க இயேசு சபை இல்லம் தனில் நுழைந்தோம். ஈராறு எம் தி.கு சகோதரிகளுடன் பிரான்சிஸ்கன் (மினி) சகோதரிகள் இருவர் கிளரேசியன் சகோதரி ஒருவருடன் இணைந்தோம் இறை இரக்க ஆண்டிலே.

அமைதியான சூழல் இளந்தென்றல் வீசும் தென்னஞ்சோலை காலையில் எரிக்கும் வெயில், மாலையில் சோ என்ற மழை, இதமான குளிர்ச்சி மிகு காற்றிலே இறைவனின் படைப்பை அதன் வனப்பை பார்த்து இரசித்து நின்றோம் இறை இரக்க ஆண்டிலே.

இரண்டே ஆண்டு இறைபணி அனுபவத்தில் இயேசு சபைக் குரு கில்பேட் அடிகளார் எம் ஏழு நாள் பாலைவன அகப் பயணத்தை ஆரம்பித்தார். என் வாழ்வின் அனுபவமே என் வாழ்க்கைக்கு பாடம் என இறை பிரசன்னத்தை உணர இறை அன்பைச் சுவைத்து இரசித்து இறை அன்பில் கரைவதே தியானம் எனத் தொடங்கினார். இரக்கமே இறை அரசுப் பணிக்கு அச்சாணி. ஆன்மீகமும் சமத்துவமும் அனைவருக்கும் பொதுவான பண்பு சீடத்துவ பணிக்கு நற்செய்தி மதிப்பீடு, விழிப்புணர்வு ஏற்றல், மன்னிப்பு, மனமாற்றம், பரிவு, பகிர்தல் ஆகிய இறை அரசின் விழுமியத்தை வாழ்தல், போன்ற கருத்துக்களுடன் காட்சித் தியானக் கடலில் மூழ்கி அமைதி, மகிழ்வு, நம்பிக்கை கொண்டு இறைவனின் நிபந்தனை அற்ற அன்பை அள்ளிப்பருக ஆவண செய்தார்.

படைப்பு, பராமரிப்பு, உடன்படிக்கை அன்புறவின் பிரதிபலிப்பான உணர்விலே உயர்ந்த உறவை, உறவிலே உயர்ந்த நன்றியை, நன்றியிலே மிதந்த மனிதத்தை, பேரிரக்கம் எனும் இனிய பரிசால் இலவசமாய் பெற்றுக் கொண்ட படைப்பின் சிகரம் தான் நான்.

எனது அழைப்பு, எனது தெரிவு தனித்துவமானது. இதனை மனிதமாக்க கிறிஸ்தவ விழுமியங்களைத்தழுவி அருங்கொடையை வாழ தந்தை, மகன் உறவில், தேடலில், காத்திருத்தலில், கேட்டலில், சுவைத்தலில், அனுபவித்தலில், அறிவிப்பதில் பகிர்வில், பரிவில் என் பணி தொடர ஒளி ஏற்றி வழி சமைத்த ஆவிக்கு நன்றி புகழ பாடுகின்றேன். வாழ்வின் அனுபவ பாடமாய், உணர்வில் வடிந்த சிந்தனையால், உறவில் மலர்ந்த உவகையில் உண்மையுடன் உரைக்கின்றேன். இவ் இறை இரக்க ஆண்டின் இனிய பரிசினை.

அருட்சகோதரி. அலிஸ்

# A call for/of mercy from nature.

What is mercy?
A heart of response in action.
Wake up ourselves
Look at the whole universe
Observe each creature
Wounded nature and vulnerable humanity
What is my response today?

Learning is a life long process
See the trees and flowers
Teach us to be a different
See the drops of snow,
Teach us to be equal;
See the ants go for march,
Teach us to be quick;
See the bees taking honey,
Teach us to be served and searched :
See the roots of the trees
Teach us to be a mediators
See the birds in a cage
Teach us to be united.





On the whole nature says
“Dear friends!
Don’t forget
You are part of us”.

In the present context
See the suffering, feel the pain
Look the lonely
Speak them gently ;
Look at the hungry
feed them generously
See the wounded ones
Bend towards them with act of mercy
Wake up ourselves
Light the lamp
Go to the people at the edag of Society

Reach out to the hearts of people
Sow the seeds of mercy
Bring the world back to God
This is the call and to you all.
“**If we don’t dare now then when?”**

Sr.Jasmin Jesunesan

# இரக்கமே இறைவனின் முகவரி

இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டு திருச்சபையின் ஒரு மைல் கல்லாகவே சேர்க்கப்பட வேண்டும். எமது திருத்தந்தை அவர்களின் தீர்க்கதரிசனப்பார்வையும் எமது தெருச்சபையை திருச்சபையாக மாற்றவேண்டிய தாகமும் உத்வேகமும் அவரில் உதயமாகி அவ்வாண்டினை இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டாக பிரகடனம் செய்வதன் நோக்கம் இங்கு துல்லியமாகத் தெரிகிறது.

இறையிரக்கம் என்றால் என்ன? இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டு எதற்காக? யூபிலி ஆண்டு முழுவதும் எம்மில் இறைவனின் அருள் பொழியப்படும் காலமாகும். குறிப்பாக இக்காலத்தில் மன்னிப்பையும் அன்பையும் எம்மில் ஆழமாக உதயமாக்கி அனுபவித்து இறைவனோடும் அயலவரோடும் ஒப்புரவாகி எமது வாழ்வை வாழ்வதற்கான அழைப்பாகும். உங்கள் தந்தை இரக்கமுள்ளவராக இருப்பது போல் நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள் என இயேசு திருவுளம் பற்றுகிறார் (லூக்.6.36) புனிதம் என்பது ஆலயங்களுக்குள் முடங்கிக்கிடப்பது ஒன்றல்ல, அது மனிதர்களிடையே பகிரப்பட, வாழப்படவேண்டியதாகும். நாம் வாழ்கின்ற சூழமைவுகளில் ஆலயங்கள் பெருகிய அளவுக்கு மனித செயல்கள், இரக்கச் சிந்தனைகள் பெருகவில்லை. இறைவனின் சாயலாகப் படைக்கப் பட்ட மனிதப்பிறவிகளில் இறைவனைக் காண முயற்சிக்காதவன் ஆலயத்திற்குள் இறைவனைக் காண முடியுமா? வழிபாடுகள் ,பக்தி முயற்சிகள் எமக்கு அவசியமானது தான். அவை எமது ஆன்மீக வாழ்வுக்கு, நிலையான வாழ்வின் உயர்ச்சிக்கு உந்து சக்தியாக மிளிர வேண்டும். வாழ்வைத் தொடாத, பக்குவ மனநிலை இல்லாத பக்தி முயற்சிகளினால் பலன் பெற முடியுமா? இறைவாத்தையை வாசித்து தியானித்து அதன் பிரகாரம் வாழாமல் என்னை நோக்கி ஆண்டவரே-ஆண்டவரே என அழைப்பதில் எது வித அர்த்தமும் இல்லையென இயேசு கூறுகிறார்.

இறைவனில் பக்தியாக இருக்கிறோம் என்பது இலகுவானது, சொகுசானது, அதேவேளை இறைவார்த்தையின்படி வாழ்வது கடினமானது. இதுதான் இயேசு கூறிய ஒடுக்கமான இடுக்கமான பாதையாகும். தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலானது எதுவுமில்லை என்கிறார் இயேசு. இதேவேளை நாம் எமது வாழ்வில் துன்பங்களில் துவண்டு, விழுந்தவர்களைக் கண்டும் காணாதவர் போல் கடந்து ஆலயப்பணிகள் செய்ய அவசரமாக

ஓடுகிறோம். நல்ல சமாரித்தன் உவமையில் வரும் துன்பத்தில் துவண்டு கிடந்த யூதனைக் கண்டுவிலகிப் போன முதல் இருவரைப் போல் தப்பி ஓடுகிறோம். அதேவேளை மூன்றாவது ஆளாக வந்த சமாரியனைப் போல் உதவிசெய்து தியாகத்தோடு உயிரையும் கொடுத்தால்-அசட்டுத்துணிவு தேவையில்லாத வேலை என நியாயப்படுத்துவோம். இரக்கத்தின் ஆண்டில் முன்னிலையில் பயணம் செய்வோம். இரக்கச் செயல்களுக்கு இதயமாற்றமும் தியாகச்செயல்களும் கிறிஸ்தவ விழுமியங்களும் மனித நேய மாண்புகளும் எம்மில் ஏற்படாத விடத்தில் அடுத்தவர்கள் மட்டில் இரக்கச் செயல்கள் மலர இடமே இருக்காது.......

"பலன் கருதா உதவி, சிறுகதை மூலமாக சிந்திப்போம்"

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியொருவர் தனது பாடசாலைத் தோழிகளுடன் பேசிக்கொண்டிருந்தபோது இப்படியாக கூறினாள். எனக்கு எங்கள் பாட்டியை மிகவும் பிடிக்கும். நானும் அவரில் நேசமாயிருக்கின்றேன். ஏன் தெரியுமா? எங்கள் பாட்டி தம்மிடம் இருக்கின்ற தங்க நகைகள் அனைத்தையும் என்னிடமே தருவதாக கூறுகிறார் என மகிழ்ச்சியுடன் மாணவி கூறினாள்.இது ஒரு நடைமுறை வாழ்க்கைதான், அதேவேளை மனித உறவுகளில், பெற்று, கொடுத்து, வாழ்வது ஒரு சிறப்பம்சமாக நிலவிவருவது இயல்பானதாகும். அதே வேளை உமது நெருங்கிய நண்பர் ஒருவருக்கு ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகின்றது. அப்போது நீர் அவருக்கு பண உதவி செய்கின்றீர். உதவியைப் பெற்றுக் கொண்டவர் உமக்கு உச்சி குளிர்ந்து நன்றி சொல்கின்றார். அதை நீரும் ஏற்றுக் கொள்கின்றீர். அதேவேளை உமது நண்பர் நன்றி சொல்வதோடு மட்டும் நின்று விட்டால் உமது உள்ளத்தில் ஒரு நெருடல் ஏற்படுகின்றது. ஆம். அவர் வாங்கிய பணத்தை திருப்பி தர வேண்டும் என்று விரும்புகின்றீர். ஆம். அது இயல்பான செயலும் கூட. ஏனெனில் நீர் கொடுத்தது கடனாகத்தான். அவர் அதை திருப்பித் தர வேண்டியது அவரது கடமை. இது தான் நியதியும் கூட.....ஆயினும் "பெறுவதிலும் பார்க்க கொடுப்பதே பேரின்பம்" எனும் தத்துவம் (தி.ப20.25ல்) கூறப்படுகின்றது. பிறருடைய தேவைகளில் உதவும் போது பிரதி பலன் பாராது உதவ வேண்டும்.

கொடுத்துக் கொடுத்துச் சிவந்தன கர்ணனின் கைகள். முல்லைக் கொடி படர தனது தேரைக் கொடுத்து உதவினான் பாரி வள்ளல் கொடுப்பதற்கு தன்னிடம் ஒன்றும் இல்லையே என்று தன் தலையைக் கொடுத்தான் குமணன். கொடு கொடு கொடுத்துக்கொண்டே இரு உன் கைகள் வலிக்கும் வரை கொடு என்றார்கள் பார் புகழும் அன்னை தெரேசா அம்மையார்.

ஓரிடத்தில் துறவி ஒருவர் விலை மதிக்கப் பெறாத வைரக்கல்



ஒன்றினை தனது சாக்குப் பையினுள் வைத்திருந்தாராம். அதே வேளை அப்பகுதியில் உண்மையான ஏழை ஒருவரும் இருந்து தன் நிலைமையை இறைவனிடம் எடுத்துரைத்து வேண்டுதல் செய்து வரும் போது இறைவன் அந்த ஏழைக்கு கனவில் தோன்றி ‘‘நீ போய் இங்கிருக்கின்ற துறவியிடம் இருக்கின்ற வைரக்கல்லை கேட்டுப் பெற்றுக் கொள’’ என்றாராம். அடுத்த நாள் அந்த ஏழை துறவியை சந்தித்து இறைவன் தமக்கு கனவில் சொன்ன விடயத்தை கூறி அந்த வைரக்கல்லை கேட்டாராம். சிறிதேனும் தாமதியாமல் அந்த துறவி தனது சாக்கு பைக்குள் இருந்த வைரக்கல்லை எடுத்து கொடுத்தாராம் .உடனே வைரக்கல்லைப் பெற்றுக் கொண்ட அந்த ஏழை நேரே வைரக்கடைக்கு சென்று அந்த கடைவியாபாரியிடம் வைரக்கலை காட்டி அதன் பெறுமதி எவ்வளவாக இருக்கும் என கேட்ட போது அதனை பரிசோதித்து பார்த்த வியாபாரி வியப்புடன் அடேயப்பா! என்ன அற்புதமான வைரக்கல் பல இலட்சங்கள் பெறுமதியானது என வியாபாரி கூறியதை கேட்டதும் மயங்கி விழாதநிலையில் உடனே வேகமாக ஓடி சென்று துறவியிடமே, ஒப்படைத்து விட்டு இதைவிட மேலான பெரிய சொத்து ஒன்று உம்மிடம் இருக்கின்றது. இதை நான் அறிவேன். அதை எனக்கு தாரும் என கெஞ்சி கேட்டாராம். துறவி, அதிசயத்துடன் அந்த ஏழையை பார்த்து வேறு எந்த ஒரு சொத்தும் என்னிடம் இல்லையப்பா என அமைதியாக சொன்னாராம். உடனே அந்த ஏழை துறவியை பார்த்து, ஐயா இவ்வளவு விலைமதிப்பு நிறைந்த வைரக்கல்லை நான் கேட்ட உடனே மறு பேச்சுக்கு இடம் இல்லாமல் கொடுக்கின்ற தூய்மையான இரக்கத்தன்மை கொண்ட இதயத்தை பெற்றுள்ளீரே அதை எனக்கு தாரும் என்று வேண்டி நின்றாராம் அந்த ஏழை.

எமது இதயங்களை எதனால் நிரப்புகின்றோம் என்பது தான் கேள்வி. நற்சிந்தனைகளால் நிரப்பினால் நல்ல உணர்வுகளும் செயல்களும் வெளிப்படும். இதயத்தில் ஈரம் சுரப்பதற்கு இதயம் வெறுமையாக வேண்டும். குப்பைகளை நிறைத்து கொண்டு இரக்கத்தை பற்றி சிந்திக்க முடியாது ‘‘ஏழையின் சிரிப்பில் இறைவன் இருப்பதை கண்டான் தலைவன், நாம், மகான்களாக இருப்பதை விட மனிதர்களாக இருப்பது மேலானது.

ம. சூசைமுத்து

# One day with landslip refugees at Miriampatha, Koslantha

The bursars' team of Jaffna visited many needy groups in their team activities and for this year visited landslip needy people at Miriampatha . The people from the landslip site were kept in two places. one is close to Haputale and the other group is close to Poonagale. This group of people was living in an old factory. A small room covered by zip board was distributed for two families. The group was very much united. They had nothing of their own. They lost everything in the landslip. Everyone talked their narrow escape from this disaster.



There are 90 families. One of the team members visited this camp with the help of Diyathalawa sisters. The travelling was very far. They talked to the people and got the information of what they need at this moment. They talked to the Grama sevaka and the in-charge police too. At the beginning they got the things and food. Now they are there fore more than one year and they are in utter poverty without much help and support. They don't want to live there anymore because they haven't even a small hut of their own to live in.

The team members gathered at Haputala Convent and divided their collection for the lent season from Communities and from the schools, where Holy Family sisters are teaching. We had prepared one sack of food items, a small bag of stationeries, a small bag of cloth and half a kg of dry fish in a separated bag with a small envelop with 500/=. We prepared all of these bags for each family. The small amount of money is

given for their travelling purpose which was expressed by them.



We, the team members, with Haputale and Diyatalawa sisters started our journey with these packed bags in the hill country. We enjoyed the beauty of creation, tea plantation, the hills and the valleys in full of green. We went round many mountains and reached the old factory. The police and health supervisor checked our things and the food items. Though there so much was lacking the people were very happy to welcome us and talk to us. More than everything else they were glad to receive something from us for some days. In their talking they were praising God for saving their lives and they trust that they will get a small house soon. We assured our prayerful wishes and distributed our hamper bags. They all Hindus were in tears while receiving the hamper bags. This gave us an opportunity to carry out a corporal work of mercy and we felt happy that we could do this act of charity to our less fortunate brethren in this Jubilee year of mercy.



We were very much touched by their last words of "Though you have nothing to give us please come and visit us".

We remembered the words of Jesus "what so ever you do to the least of my brethren that you do unto me".

***Bursars' Team***

# நிஜங்களும் நிழல்களும்

அவனுக்கு அதுபிடிக்கவில்லை,
அவனுக்கு அதன்மீது விருப்பமில்லை,
அவனால் அதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை,
அதை அழிப்பதற்கு வழிதேடினான்
மரத்தின் கீழ் அமர்ந்தான்
அது அங்கேயும் வந்தது...
வெட்டினான் மரத்தை
மீண்டும் அது தொடர்ந்தது...



தன் வீட்டினுள் நுழைந்தான்
அங்கேயும் அது வந்தது
அவ்வீட்டையும் இடித்தான்
மீண்டும் அது தொடர்ந்தது...
மனிதா...!
நிஜங்கள் இருக்கும் வரை
நிழல்கள் வாழத்தானே செய்யும்
நிழல் நிஜமல்ல அழிப்பதற்கு...
நிஜத்தின் வெறும் விம்பமே..

இது ஒரு சவால்...
நிழல்களை நிஜங்களாய் மாற்றிடாதே..
இது ஒரு உண்மை...
நிஜங்கள் இருக்கும் வரை நிழல்கள் தொடரும்
மறந்திடாதே...

அ.அருண்சியஸ்வாஸ்
தரம்-09
கிளி/இரணைதீவு றோ.க.வித்தி

# The Divine Heart



A Heart that loves you and me unconditionally for it always burns, for the love for Humanity.
A heart that embraces all of us as we are.
A heart that welcomes you and me with – stretched hands.
A heart that is always filled with compassion.
A heart that is always full of mercy to forgive every wrong that we commit.
A heart that is always sensitive to the need of you and mine.
A heart that always desires to give hope and life to all –whenever we lose hope in life.
A heart that always cares for you and me to protect us from every evil.
A heart that endure the pain that we cause by our sins and failures.
A heart that redeemed you and me by hanging on the Cross.
A HEART that always speaks within you and me.
"I love you so…..so….so…. much. Because you are mine. I love you".
It is the Divine HEART of Jesus……

***Sr. Jenistella .A***

# My Experience in Martillac

God has given me the opportunity to visit the place of our Founder. So, first of all, I thank God with my whole heart for this great gift. It has been a remarkable experience in my life. Since it was a multi-cultural gathering, I came to know a lot about other cultures and was enriched by the rich sharing of each participant. We had the privilege to visit the Cathedral of St. Andrew and some special places in Bordeaux that are associated with the life of our Founder. We were thrilled to visit the hermitage where our Good Father spent a lot of time.

Our programme started with an opening ritual "Celebrating Life by giving it". The themes chosen for this session were very useful and helpful to our day to day religious life. The themes were: The Trinity, presence of love in creation. the inner life, to live the spirit of God alone today is a 'yes' to God in an attitude of total abandonment to God who is life, consecrated for mission, fullness of life, radically free, exodus and me, mystics and prophets for today, with a passionate heart, discerning God's will in daily life, community for mission. These were very life giving thoughts.

I admired the beautiful trees and flowers and I was able to feel one with nature.

I am very grateful to our Leadership Team who gave me the chance to visit the place of our Founder and to have such an enriching experience.

***Sr.Freeda***



# போர் தந்த பரிசு

வன்னிப் பெரு நிலப்பரப்பின்



காணாமல் போனோரின்
கதை இன்னும் முடியவில்லை
கல்லறைகள் கூட இல்லாத
சோதரரின் நினைவுகள் இன்னும் தொலையவில்லை
போரின் பரிசாக பல திருமணங்கள்
இளம்வயதில் கணவனை மனைவியை
பிள்ளைகளைப் பிரிந்தோர் பலர்
மறு மணங்கள் தாராளம் - இதனால்
நிர்க்கதியான குழந்தைகள் பலர்
தந்தை தாய் முகம் தெரியாக் குழந்தைகளின்
கண்ணீரைத் துடைப்பது யார்?

வயல் கொழிக்கும் வன்னியின்
கடல்வளம் சுரண்டப் படுகின்றது
நீர் வளமும் நில வளமும் நிறைந்த பூமியில்
இராணுவக் குடியிருப்புக்கள்
எமது இளைஞரால் வளர்க்கப்பட்ட
மரங்கள் வெட்டப்படுகின்றன
பாலை முதிரை தேக்கு என்று
இரவோடிரவாக பயணிக்கும் காட்சி
நச்சுப் பூமியில் நாம் வாழ்கின்றோம்



கொத்துக் குண்டால் தாக்கப்பட்டோர் பலர்
அதை வீசவில்லை என்பது பலர் சொல்லும் பொய்
கீரோ சீமா ராகசாக்கியின் சுவடுகள்
இங்கே தெரிகின்றது.

உருப்படியான மனிதர்கள் ஆனால்
உருக்குலைந்து நிற்கிறார்கள்
நச்சு ஊசியினால் நாசமாகியது இளமை
கான்சர் என்றும் காய்ச்சல் என்றும்
தீடீர் மரணங்கள் - இது
புனர் வாழ்வு தந்த பரிசு
தமிழினத்தின் சந்ததி உயிரோடு புதைக்கப்பட்டது
புனர்வாழ்வு பெற்றவர்கள் மலடாக நிற்கின்றார்கள்.

வன்னியின் செல்வங்கள்
இரும்புத்துண்டை தோழில் சுமந்து நிற்கின்றது
தார் போட்ட காப்பெற் வீதி
உல்லாசமாய் பயணிக்கின்றோம்
எங்கள் பிள்ளைகள் அதற்குள் உறங்குகிறார்கள்

முள்ளிவாய்கால் முழுவதும்
இறந்த உடல்களை சுமந்த பூமி
காணாமல் போனோர் காயப்பட்டோர்
இறந்தோர் என போரின் வடுக்களை

சுமந்து நிற்கும் குடும்பங்கள் தான் எத்தனை
தங்கள் கால்களை கண்களை கைகளை
நாட்டிற்காய் கொடுத்துவிட்டு
நாதியற்று நிற்கும் இளைஞர்கட்கு
நாம் என்ன செய்யப் போகின்றோம்?
வாழும் வயதில் கணவனை இழந்து
சுமைகளால் சோர்ந்து நிற்கும்
எம் சோதரர்க்கு வாழ்வை உயர்த்த
எமது சிறு கைத் தொழில் போதுமா?
துணிவோடு எழுவோம்
இப்போ செய்யா விட்டால்
எப்போ செய்யப் போகின்றோம்?
தூங்கியது போதும் எழுவோம்
சுகமாய் வாழ்ந்தது போதும் சுமைகளைத் தூக்குவோம்
காலத்தின் தேவை உன்னை அழைக்கிறது
வன்னியில் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளில்
தஞ்சமடையும் அகதிக் குழந்தைகட்கு
ஆபிரிக்கா கண்டங்களில் பசியால் வாடும் குழந்தைகட்கு,
போதை தஞ்சமென்று அழியும் இளைஞர்கட்கு
எமது காலடி படாத இடங்கள் பல உண்டு
சகோதரமே புறப்படு சிந்தி செயற்படு.



அருட்சகோதரி எலிசபெத்.அ

# திருமடசார்பற்ற குழுவினரின் ஆன்மீகப் பயணத்தில் ஓர் மைல் கல்

எமது சபையின் 6வது பொதுக்கூட்டம் 2016 ஆடி 17 – 23ம் திகதி வரை உரோமாபுரியில் உள்ள அப்போஸ்தலிக்க குழுவினரின் தாய்மடத்தில் இடம் பெற்றது.



இலங்கையில் தென்மாகாணத்திலிருந்து மூவரும், யாழ்ப்பாணத்திலிருந்து இருவரும் கலந்துகொண்டோம். இந்தத்தடவை தமிழ்நாடு தூத்துக்குடியிலிருந்து ஒரு சகோதரி பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டமை மகிழ்ச்சிக்குரியது.

சபைத்தலைவி ஆலோசகர்கள் உட்பட 23 அங்கத்தவர்கள் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றினோம்.

பொதுக்கூட்டத்தின் கருப்பொருள்

“ புதிய பாதையை நோக்கி ஆவியால் வழிநடத்தப்பட்டு இன்றைய புதிய உலகக் கண்ணோட்டத்தில் எமது அர்ப்பணத்தை குடும்பமாக எங்கனம் வாழமுடியும்”

இக்கருப்பொருளை மையமாகக் கொண்டு குழுத்தலைவி மரிய

டொலறோஸ் அவர்களின் ஆரம்ப உரை பொது அமர்வுக்கான நோக்கத்தை தெளிவுபடுத்தி அனைத்து அங்கத்தவர்களையும் ஆழமான பங்குபற்றுதலுக்கு இட்டுச் சென்றது. அங்கத்தவர்கள் அனைவரும் அமர்வின் காத்திரத்தை உணர்ந்தவர்களாய் அர்ப்பணிப்புடன் பங்களிப்புச் செய்ததை உணரமுடிந்தது.

மொழியின் அடிப்படையிலான வழிபாடுகள் திருப்பலி தனிச்சிந்தனை குழுச்செயற்பாடுகள் அனைத்திலும் இக்கருப்பொருள் இழையோடியதைக் காணக்கூடியதாக இருந்தது.



அத்துடன் குழுத் தலைவி ஆலோசகர்களுக்கான தெரிவு இடம்பெற்றது. இம்முறை மீண்டும் மரிய டொலறோஸ் குழுவின் தலைவியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் ஏற்கனவே இருந்த நால்வருடன் புதிதாக இன்னும் இருவர் ஆலோ சகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பல நாடுகளிலிருந்து வந்தவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள மொழி தடையாக இருந்தபோதிலும் எம்மிடையே சகோதரத்துவத்தையும் குடும்ப உணர்வையும் உணர முடிந்தது.

எமது குழுவின் 6வது பொதுக்கூட்டம் நீடித்து நிலைக்கக்கூடிய ஆன்மீக அனுபவத்தையும் பலதரப்பட்ட சவால்களின் மத்தியில் எமது வாழ்வை அர்த்தமும் சாட்சியமும் உள்ளதாக வாழ உந்துதலையும் தந்தது.

இச்சந்தர்ப்பத்தில் எமது பயணத்திற்கான அனைத்து ஒழுங்குகளையும் செய்து உதவிய யாழ் மாகாணத்தலைமைத்துவ குழு சகோதரிகளுக்கு எம் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ந்தும் எமது குழு வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் செபத்தையும் வேண்டிநிற்கின்றோம்.

திருமடசார்பற்ற குழு.

# TRY YOUR BEST TO TOUCH THE DIVINE

As I was reading and reflecting on the mercy of God and the whole cosmic existence, there was a time I came to realize the I m very often concerned about my life of the past and the future but, failed to find contentment in the , kindness- friendliness ,blessing and beauty of the present which is in front of me. I asked myself; why am I here now? What is the goal of my life and my efforts?. I discern very often why I m so much concerned and worried about my past and future. My inner voice showed me the way. “Try to swim in the sea of God’s love, His unconditional love and kindness at present-Now” Past is past and future is not in my hand. This inspiration gave me freedom of heart and it cures my past wounds and gives me strength to love “ALL, especially all those who had hurt me. I experience in my day today life that I m clothed with the fruits of the Holy Spirit. “The Spirit produces Love, Joy, Peace, kindness, faithfulness, humility and self-control” (Gal 5: 22).With all my limitation, I was able to become in solidarity with the touch of the divine. Divine is not anywhere but it’s within me, around me and everywhere. As some author has said; “Past is a history future is a mystery. But present is a gift “That is why it is called “PRESENT” So why can’t we experience and enjoy the present in its fullness? Why can’t we experience the divine and live the “Now”?.

The way we share our God experience by our being we transform the whole cosmic, humanity. We will reach out to all people of God and bring them together. This awareness helped me to begin the journey to dwell on relationship of the presence of now not only with people but also the day to day blessings produced by the Divine.

God’s presence around me in creation, the word of God and the Holy Eucharist which give me light , inspiration and shows the correct direction to enjoy and see the Divine in everything. Its challenge me to live the “Now”. There are always joyful and painful experiences in life but that is the reality of life. If we allow ourselves to touch the divine,and be touched by the Divine, then our life will radiate joy and peace within and around. The psalmist says “To commit yourselves and your ways to the Lord and trust him, He will act (Ps37/5).

It is a call to change my mindset and go beyond all these barriers which block to touch and live the Divine. Don’t loss heart, start “Now” and live the “Now”.

Sr. Nevis

# “நீர் என்னைத் தொட்டீர் நான் நலமடைந்தேன்”

53 வயதான வின்சியோ ரீவா (Vincio Riva) என்ற இத்தாலியருக்கு, 2013ம் ஆண்டு, நவம்பர் 6ம் தேதி, அவர் வாழ்வில் மறக்கமுடியாத நாளாக அமைந்தது. அன்று, அவர், தன் அத்தை கேத்தரீனா அவர்களுடன், வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில், திருத்தந்தை வழங்கிய புதன் மறைக்கல்வி உரையில் கலந்துகொள்ள வந்திருந்தார்.

அன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வின்சியோ அவர்களை அணைத்து, முத்தமிட்டு, ஆசீர் வழங்கிய காட்சி, உலக ஊடகங்களில் ஆழமான பாதிப்புக்களை உருவாக்கியது. காரணம் என்ன? வின்சியோ அவர்கள், ஓர் அரிய நோயால் பாதிக்கப்பட்டு, முகமெங்கும் கொப்பளங்கள் நிறைந்த விகாரத்தோற்றம் கொண்டவர். 15 வயதில் இந்த நோயால் தாக்கப்பட்ட வின்சியோவைக் கண்டதும் ஒதுங்கிச் செல்வோர் மட்டுமே அதிகம். அந்த நோய்க்குப் பின், தன் தந்தையும் தன்னை அணைத்ததில்லை என்று வின்சியோ அவர்கள் ஊடகங்களிடம் கூறினார்.

புனித பேதுரு வளாகத்தில், திருத்தந்தையின் ஆசீரை தூரத்திலிருந்து பெறுவோம் என்ற நம்பிக்கையில் அவர் அங்கு வந்தார். ஆனால், அவரைக் கண்டதும், திருத்தந்தை, முகத்தோடு முகம் வைத்து, அணைத்து முத்தமிட்டது, அவரை ஆனந்த அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஒரு வார்த்தையும் சொல்லாமல் நிகழ்ந்த இந்த அணைப்பைக் குறித்து, வின்சியோ அவர்கள் பேட்டியளித்தபோது, ”நான் விண்ணகத்தில் இருந்ததைப்போல் உணர்ந்தேன். என் உள்ளத்திலிருந்து பெரியதொரு பாரம் கரைந்ததைப் போல் இருந்தது. இறைவன் என்னைக் காக்கின்றார் என்ற உறுதியுடன், நான் இனி என் வாழ்வைத் தொடர முடியும்” என்று கூறினார்.

சில நிமிடங்களே நீடித்த அந்தச் சந்திப்பைக் குறித்து பேசிய அவரது அத்தை கேத்தரீனா அவர்கள், ”திருத்தந்தை அவர்கள், வின்சியோவை அணைத்து நின்றதைக் கண்டபோது, அவர், அவரை விட்டுவிடப் போவதில்லை என்பதை உணர முடிந்தது” என்று கூறினார். “நீர் என்னைத் தொட்டீர், நான் நலமடைந்தேன்“ என்று இறைவனிடம் நாம் கூறும் வார்த்தைகள், நினைவில் நிழலாடுகின்றன.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# எமது பயணங்களில் புதிய அனுபவங்கள்

இலங்கை மண்ணில் வசிக்கும் எமக்கு இலங்கையின் மற்றைய இடங்களைப் பற்றிய அறிவு எமக்கிருந்தாலும் அதனைப் பார்வையிடும் வாய்ப்பு எட்டாக் கனியாகவே இருந்தது. அதற்கான ஓர் சந்தர்ப்பமாகவே எமது சுற்றுலாப் பயணம் அமைந்தது.

எமது பயணம் 01. 07. 2016 அன்று காலை 5.30 மணியளவில் இறை ஆசீரைப் பெற்றவர்களாக ஆரம்பித்தோம். எமது அனைத்து தேவைகளையும் அதாவது தங்குமிட வசதிகள், உணவிற்கான ஏற்பாடுகள் மற்றும் இடங்களைப் பார்வையிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் எமது அருட்சகோதரிகள் முன்கூட்டியே திட்டமிட்டு ஆய்த்தப்படுத்தியிருந்தனர்.

பேருந்தில் மிகவும் சுதந்திரமாக ஆடிப்பாடி மகிழ்ந்திருந்தோம். எமது நெடுந்தூர பயணத்தின் பின் மன்னார் தீவை வந்தடைந்தோம். அங்கு பேசாலை கடற்கரையில் மிகவும் சந்தோசமாகவும், ஒற்றுமையாகவும் அனைவரும் குதூகலமாக விளையாடினோம். இது எங்கள் அனைவருக்கும் புதுமையான ஓர் அனுபவத்தைத் தந்தது. அங்குள்ள மக்களும் எம்மை மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தனர். இரண்டாவது நாள் நாம் மடு யாத்திரை ஸ்தலத்திற்கு சென்றோம். அங்கு மடு அன்னையின் திருவிழாவில் பங்குகொள்ளும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. எத்தனையோ இலட்சம் மக்களோடு இணைந்து இதுவரை காலமும் நாங்கள் கண்டிராத திருப்பலியில் பங்குபற்றி, அன்னையின் ஆசீரைப் பெற்று மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.

அதனைத் தொடர்ந்து எங்களுடைய பயணம் யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றது. அங்கு நல்லூர் கோவில் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரர் கோவில்களுக்குச் சென்றோம். இதுதான் முதல் முறை நாங்கள் இவ்விடங்களைப் பார்த்திருக்கின்றோம்.

அதன் பின்னர் அருட்சகோதரிகளால் வழிநடத்தப்படும் மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் இளவாலை போன்ற விடுதிச்சாலை பிள்ளைகளுடன் இணைந்து கலந்துரையாடினோம். எமது ஆற்றல்களை வெளிப்படுத்தவும், அவர்களின் ஆற்றல்களை கண்டுகளிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்ததை நினைந்து மிகவும் சந்தோசப்படுகின்றோம். இவ்வாறு எங்களுடைய சுற்றுலாப் பயணம் 3 நாட்களாக அமைந்தது. தொடர்ந்து பாதுகாப்பாகவும் உளம் நிறைந்த மகிழ்வுடனும் எம்

இல்லத்தை வந்தடைந்தோம்.



எங்களிடம் எந்தவித எதிர்பார்ப்புக்களுமின்றி எங்களை அழைத்துச்சென்று எங்களுக்கு வேண்டிய எல்லா சலுகைகளையும் ஏற்பாடு செய்து தந்த எம்மோடு வாழும் எமது அருட்சகோதரிகளுக்கு எங்கள் அனைவரினதும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம் மற்றும் நாம் சென்ற இடங்களிலே எம்மை அன்போடும், பாசத்தோடும் உபசரித்து எமது தேவைகளில் கரிசனையோடு செயற்பட்ட அனைத்து அருட்சகோதரிகளையும் நன்றியோடு நினைக்கின்றோம். எமது பயணத்திற்குத் தேவையான செலவுகளை தாராள மனதுடன் தந்துதவிய எமது அன்பிற்கும், மதிப்பிற்கும், பாசத்திற்குமுரிய எமது பதுளை மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கும் எமது உள்ளத்தின் நன்றிகளை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

விடுதிச்சாலை மாணவிகள்
அப்புத்தளை

## First Three Articles of the Holy Family Association
## Some reflections.

· Pierre Bien VenuNoailles was captured by the vision of Jesus 'that they may be all one" and heard the call to make the whole human race into one Family. The charism was given to him to build Family which includes all races, cultures. His dream of a big tree with many branches and birds of several kinds singing 'Glory to God alone' with one voice is symbolic of unity and communion. What inspired him to found as association, was the need of the hour. In chaotic situation he felt the need to serve the people and to save them. In order to begin a mission we need to have a vision. A vision to see, judge and act. He began a mission to answer the call of the signs of the times. Pope Francis in his "EvangeliiGaudium" says "I am a mission". A mission is not something external but a call within to commit oneself for service with sacrifice. I am called for a mission to respond to the challenges of the world. I need to identify the urgent needs of my society and offer myself to rebuild, rehabilitate and stabilize a peaceful and just society.

· Aim of the Association: The aim is go to the sources. It is not discovering something new but to look back to the values lived in the beginning. Let us go to our roots. The first Christians lived a life true communion. They were witnesses of Christ by their deep faith. They lived together and loved each other. They shared all that they have and prayed together. Their faith was visible in all their actions and attitudes. They cared for each other and nothing lacking for any one. The formation of basic Christian communities in the parishes is a step towards following the first Christians.PBN was very much attracted by the life of the Holy Family. He received many inspirations from them. They were a model for his spiritual life. He found in them the spirit of God alone which motivated all their actions. Holy Family a visible image of the Trinity is the source and strength to the association he envisaged. There is better model for him than the Holy Family in whom he placed all his trust. We are in

world of division and rivalry. It is our responsibility to become visible signs of unity. Do we reflect in our lives the examples of the Holy Family and the first Christians?



3. Five vocations: No man is an island. We need to live with others and live for others. To build a house we need the collaboration of many skilled men. Likewise our mission is one. We have the same aim. However we need the support of the others in fulfilling the mission. Our vision and strength is limited. We need to share our resources and talents. If five vocations join together the mission becomes easy. Each vocation must show concern for other vocations. Interdependence – interconnectedness – intercommunication is necessary for enrichment and communion. We need to be a family in order to build a family. The charism is a challenge which we ought to reflect more deeply. The sense of belonging to one family, sense of equality and mutual respect needs to be improved. Accept each other; trust each other with the spirit of openness.
Let the Founder's dream become reality in our lives.